பக்கங்கள் எட்டு

விலை ரூபா: **5.00**

# வலம்புரி
VALAMPURI

**லாலா சோப்**
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
**V. S. M. ஸ்ரோர்ஸ்**
அந்தோனியார் வீதி
மானிப்பாய்

லாலாசோப் அச்சுவேலி
(கி. 1045)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 10 சனிக்கிழமை (25-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 341

## ★ இனயுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர

# இலங்கை அரசு - புலிகள் பரஸ்பரம் நம்பிக்கை கொள்வது அவசியம்!

## பிரபாகரனை மீண்டும் சந்திப்பேன் இதுவே தருணம் என்கிறார் எரிக்சோல்

(புதுடில்லி)

இலங்கையில் இனயுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை உரியமுறையில் பயன்படுத்தவேண்டும்.

இதன்மூலம் யுத்தநிறுத்தம் ஒன்றையும், பேச்சுவார்த்தை மூலமான இணக்கத்திர்வொன்றுக்குமான சாத்தியக்கூறுகள் பிரகாசமானவையாக முடியும் என்றும், நோர்வேயின் விசேட சமாதானதூதுவர் எரிக்சோல் ஹெய்ம் நம்பிக்கை வெளியிட்டிருப்பதுடன், பிரபாகரனுடன் பேசுவதற்கு மீண்டும் வன்னிசெல்வேன் என்றும் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில்இந்துப்பத்திரிகையின் செய்தியாளர் இராஜமோகனுடன் நடத்திய பிரத்தியேக சம்பாசனை ஒன்றின் போதே தூதுவர் எரிக்சோல் ஹைம் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

**பேச்சுக்குரிய சூழ் நிலை உருவாக வேண்டும்**

சம காலத்தில் இருதரப்பினரும் பரஸ்பரம் மோதல்களை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குத் தேவையான சூழ் நிலையைக் கொண்டு வருவதற்கு உதவ முடியும்.

விடுதலைப்புலிகளிடமும், இலங்கை அரசிடமும் ஆழமாக வேரூன்றியிருக்கும் நம்பிக்கையீனத்தை நோக்குகையில் மேற் கூறப்பட்ட சூழ்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## க.பொ.த. உயர்தர முடிவுகள் 28ம் திகதிக்குள்வெளிவரும்

### ஆணையாளர் வலம்புரிக்கு தெரிவிப்பு

[கொழும்பு]

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. [உயர்தர] பரீட்சை முடிவுகள் வெளியிடப்படுவது மேலும் சில நாட்கள் தாமதமாம் எனபரீட்சைத்திணைக்கள ஆணையாளர் ஏ.எம். ஆர் டி அமரக்கோன் வலம்புரிக்கு நேற்றுத் தெரிவித்தார்

க பொ. த. [உயர்] தரப் பரீட்சை முடிவுகள் தொடர்பாக பரீட்சைத் திணைக்கள ஆணையாளருடன் நேற்று

→ 8ஆம் பக்கம் பார்க்க

## இன்று விமானசேவை

(யாழ்ப்பாணம்)

பலாலிக்கும் இரத்மலனைக்கும் இடையிலான பணிகள் விமானசேவை இன்று சனிக்கிழமை இடம்பெறுமென யாழ் சிவில்நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது

ஒரு விமானசேவை மட்டுமே இடம்பெறுமெனவும் பயண பாதுகாப்பு அனுமதி மற்றும் பயணச்சீட்டுப்பெற்ற பயணிகள் இன்று காலை 8 மணிக்கு பயண ஆவணங்களுடன் யாழ் சிங்கள மகா வித்தியாலயத்துக்கு வருமாறும் யாழ்சிவில்நிர்வாகக்காரியாலயம் கேட்டுள்ளது. (ஸ்ரீ)

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக அனுருத்த?

(கொழும்பு)

நாட்டின்பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு மீண்டும் முன்னாள்பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்த நியமிக்கப் படவுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு அண்மையில் சீனா சென்றிருந்த இவர் அங்கு அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு கடந்த22ம் திகதி நாடு திரும்பியமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ)

## 'மாவீரர்' தின எழுச்சி நிகழ்வுகள் இன்று உணர்வுபூர்வமாக ஆரம்பம்

(வவுனியா)

மாவீரர் தின எழுச்சி நாள் இன்று ஆரம்பமாகி, 27ம் திகதி வரை உணர்ச்சி பூர்வமாக கொண்டாடப்படவுள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

இன்று (25 / 11 / 2000) காலை எட்டு மணிக்கு (பழைய நேரம்) தமிழீழப் பகுதிகளில் தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டு 27ம் திகதி இறக்கப்பட வேண்டும் என்றும், பாடசாலைகளில் 6.30 மணிக்கு இறக்கப்பட வேண்டும் என்றும், மாவீரர் துயிலும் இல்லங்களிலும் தேசியக்கொடி ஏற்றப்படும் என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

தேசியக் கொடி ஏற்றும்

கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பிடத் தக்கது. (ஸ்ரீ)

ளனர்.

என்றும், பாடசாலைகளில் தேசியக்கொடி 25,26,27ம் திகதிகளில் பகல் 12.02 மணிக்கு ஏற்றப்பட்டு மாலை

தேசியக் கொடி ஏற்றும் வைபவத்தை அடுத்து, புலிகளின் குரல் வானொலி

→ 8ஆம் பக்கம் பார்க்க

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் பகிஷ்கரிப்பு போராட்டம்

## கைதான மாணவனை விடுவிக்கக்கோரி

(யாழ்ப்பாணம்)

மந்துவில் பகுதியில் கடந்த 4ம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட யாழ் தொழில்நுட்பக் கல்லூரியின் முழுநேரப் பயிற்சி நெறி மாணவன் இராசையா ஸ்ரீரங்கநாதனை விடுவிக்கக் கோரி யாழ். தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் காலவரையறையற்ற பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மாணவன் இறுதிப் பரீட்சைக்கு தோற்றவுள்ளதால் அவரை உடன் விடுதலை செய்வது பற்றி மாணவர் மன்றம் பல மனித நேய அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையிலேயே மாணவர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

[வவுனியா]

திருமலை மாவட்டம் மூதூரில் இடம் பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

● மேஜர் கலைவேந்தன்
தியாகலிங்கம் சுதர்ஸனன்

(யாழ்ப்பாணம்)

● கப்டன் சிவநேசன்
சுந்தரலிங்கம் ராகுலன்
(திருமலை)

● லெப்டினன்ட் தமிழ்வாணன்
வீரமுத்து பாலகிருஷ்ணன்
(திருமலை)

→ 8ஆம் பக்கம் பார்க்க

# இலக்கம் எடுத்தவர்களே இன்றுபதிவுசெய்ய முடியும்

விமானமூலம் வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகளில் நேற்று பயணப்பதிவுகளை மேற்கொள்ள முடியாமல் இலக்கம் கொடுக்கப்பட்ட பயணிகள் மாத்திரம் இன்று தமது பயணப்பதிவுகளை மேற்கொள்ள முடியுமென ''றான்'' இணைப்பாளர் எஸ் குகராஜன் தெரிவித்தார்.

மேற்படி இலக்கம் கொடுக்சப்பட்டவர்கள் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை தமது பதிவுகளை மேற்கொள்ளலாமென அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# இலங்கைஅரசியலில்டைனோசர்கள் பிரிட்டிஷ் அமைச்சர் விபரிப்பு

(கொழும்பு)

யுராசிக் காலத்தில் வாழ்ந்தழிந்த டைனோசர்கள் போல் இலங்கை அரசியலிலும் சில டைனோசர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசும் போது பிரிட்டிஷ் அமைச்சர் பீற்றர்ஹெயின் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் வாழும் சில அரசியல் கட்சிகள் தமிழ் சிங்கள மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஒருபோதும் விரும்பாதவர்கள்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முயலும் நோர்வே நாட்டின் விஷே—

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### மலிவு விலை

பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் நாவல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் அனைத்தும் மலிவாக எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். இன்றே விஜயம் செய்யுங்கள். ஸ்ரீ சக்தி புத்தகசாலை சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்துக்கு அருகாமை ஆடிய பாதம் வீதி திருநெல்வேலி. (கி-1056)


# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

நவம்பர் மாதம் 24-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் யாழ் குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 139770 ஏ | 139770 பி |
| 139770 சி | 165884 ஏ |
| 166932 ஏ | 166932 பி |
| 169114 ஏ | 169114 பி |
| 169114 சி | 169299 ஏ |
| 169323 ஏ | 170297 ஏ |
| 170297 பி | 170297 சி |
| 170297 டி | 165476 ஏ |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 152290 ஏ | 152290 பி |
| 163267 ஏ | 163267 பி |
| 163267 சி | 163267 டி |
| 163507 ஏ | 163507 பி |
| 163507 சி | 163507 டி |
| 163507 ஈ | 168531 ஏ |
| 168585 ஏ | 168585 பி |
| 168585 சி | 168585 டி |
| 168585 ஈ | 168646 ஏ |
| 168646 பி | 168721 ஏ |
| 168721 பி | 178763 ஏ |
| 168763 பி | 168763 சி |
| 168808 ஏ | 168941 ஏ |
| 168941 பி | 171652 ஏ |
| 171713 ஏ | 171739 ஏ |
| 171739 பி | 171745 ஏ |
| 171745 பி | 171745 சி |
| 171745 டி | 171745 ஈ |
| 171745 எவ் | 171765 ஏ |
| 171765 பி | 171765 சி |
| 171765 டி | 171765 ஈ |
| 171765 எவ் | 171789 ஏ |
| 171789 பி | 171789 சி |
| 171789 டி | 171809 ஏ |
| 171837 ஏ | 171845 ஏ |
| 171845 பி | 171909 ஏ |
| 171909 பி | 172043 ஏ |
| 172106 ஏ | 172106 பி |

### கோப்பாய்

| | |
|---|---|
| 193872 ஏ | 167570 ஏ |
| 167570 பி | 167570 சி |

### நல்லூர்

| | |
|---|---|
| 167753 ஏ | 167753 பி |
| 167753 சி | 163268 ஏ |
| 163268 பி | 163268 சி |
| 163268 டி | 166349 ஏ |
| 168740 ஏ | 168740 பி |
| 168765 ஏ | 168765 பி |
| 168781 ஏ | 168837 ஏ |
| 168884 ஏ | 171660 ஏ |
| 171660 பி | 171660 சி |
| 171690 ஏ | 171690 பி |
| 171690 சி | 171723 ஏ |
| 171737 ஏ | 171737 பி |
| 171784 ஏ | 171784 பி |
| 171785 ஏ | 171785 பி |
| 171786 ஏ | 172047 ஏ |
| 172094 ஏ | 172094 பி |
| 172094 சி | 161761 ஏ |
| 161761 பி | 161761 சி |
| 161761 டி | 161782 ஏ |
| 161782 பி | 161782 சி |
| 161782 டி | 161782 ஈ |
| 165882 ஏ | 165882 பி |
| 165882 சி | 165882 டி |
| 168995 ஏ | 168995 பி |
| 169071 ஏ | 169071 பி |
| 169071 சி | 169082 ஏ |
| 170117 ஏ | 170117 பி |
| 170117 சி | 170117 டி |
| 170117 ஈ | 170363 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 156005 ஏ | 156005 பி |
| 156005 சி | 16 460 ஏ |
| 160460 பி | 164254 ஏ |
| 164254 பி | 165720 ஏ |
| 165720 பி | 165720 சி |
| 165720 டி | 165720 ஈ |

# புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்க விரைவில் நடவடிக்கை

(துன்னாலை)

தென்மராட்சி வலய கல்வித் திணைக்களத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 05 மாணவர்களிற்கான புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

நெல்லியடிப்பகுதியில் இயங்கும் தென்மராட்சி வலயக்கல்வித் திணைக்களத்தில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள்வந்துபெற்றுக்கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (க-41)

# இளைஞர்கள் கைது
## ஆணைக்குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

சங்கானையைச் சேர்ந்த சுப்பையா தூயஞான செல்வம் (வயது 44), நீராவியடியைச் சேர்ந்த இராசையா சிவகுமாரன் (வயது 33), இடம்பெயர்ந்து மானிப்பாயில் வசித்து வந்த பத்மநாதன் கருணாநிதி (வயது 34) ஆகியோர் இம்மாதம் 19 ஆம் திகதி அவரவர் வீட்டில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக உறவினர்களால் தனித்தனியே மனித உரிமைகள் ஆணைக்குழு காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேசமயம், அண்மையில் கொடிகாமம் சந்தியில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட கந்தசாமி தவராசா (வயது 22) என்பவர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில்தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-12)

# சைக்கிள் திருடியவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிவான் நீதி மன்றத்திற்கு முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளை எடுத்துச் சென்றதாக கூறி யாழ்ப்பாணம் 5 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த நீக்லஸ் அன்ரனி (வயது 32) என்பவரை யாழ். பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்.

பிரஸ்தாப நபர் நேற்று முன்தினம் நீதிமன்றம்செயற்பட்டுக் கொண்டிருந்த வேளை பூட்டாமல் விடப்பட்ட சைக்கிள் ஒன்றை எடுத்துச் சென்றதைஅவதானித்த நபர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்தே பிரஸ்தாப நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (க-12)

# செய்தித் துளிகள்

## ஒளி விழா

நெடுந்தீவுக் கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் ஒளிவிழா எதிர்வரும் டிசம்பர் 05 ஆம் திகதி நடைபெறவுள்ளது

பாடசாலையின் அதிபர் கே அன்ரன் பரிபதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் இம்முறை கிறிஸ்மஸ் கீதங்களுடன் நட்டிய நடனம், வில்லுப்பாட்டு முதலியனவும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ச-110]

★ ★ ★

(கந்தர்மடம்)

உடுவிலில் அமைந்துள்ள 'ஆக்' அநாதைச் சிறுவர் இல்லம் அடுத்த மாதம் முதலாம் திகதி காலை 9மணிக்கு ஒளிவிழா கொண்டாடவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக அருட்தந்தை ஏ எவ் பெனற் (மானிப்பாய் பங்குத்தந்தை) சிறப்பு விருந்தினராக சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்து கொள்ளவுள்ளனர் இவ்விழா 'ஆக்' விளையாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-37)

## இன்று பரீட்சை

(ஈச்சமோட்டை)

யாழ் பல்கலைக் கழகத்தின் தொழிலாளர் கற்கை நெறிப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று ஆரம்பமாகும் மேற்படி பரீட்சை தொடர்ந்து 28 ஆம் திகதியும், எதிர்வரும் டிசம்பர் 2 ஆம், 6 ஆம் திகதிகளிலும் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-59)

## ஈச்சமோட்டை சுற்றி வளைப்பு

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டை கொய்யாத் தோட்டம் மற்றும் சுண்டுக்குளிப்பகுதிகள் நேற்று சுற்றி வளைக்கப்பட்டு தேடுதலுக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது அப்பகுதியினூடே சென்றவர்களும், வீடுகளும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனஇத்தேடுதலின் போது எவரும் கைது செய்யப்பட்டதாக தகவல் இல்லை, (க-ச-59)

## தெல்லிப்பழை அறநிதிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் அறநிதியச் சபையின்கூட்டம் கடந்த11-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை தேவஸ்தான உபதலைவரும் சட்டத்தரணியுமாகிய மு சபாநாதன் தலைமையில் தேவஸ்தான பொது அலுவலகத்தில் நடைபெற்றது.

## சச்சரவுகள் அதிகரிப்பு

(துன்னாலை)

யாழ் போதனாவைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காக வருவோரிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படுவதனை அவதானிக்க முடி

## பிரிவுத் துயர் பகிர்வு

### திருமதி சின்னத்துரை பரமேஸ்வரி

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த சின்னத்துரை பரமேஸ்வரி 22. 11. 2000 அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் 23. 11. 2000 அன்று கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தகவல்: ஆரோக்கியநாதன் (மகன்)

### அருணாசலம் ஆறுமுகம் (ஜே.பி.)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் ஆறுமுகம் 23 ஆம் திகதி சிவபதமடைந்தார்.

இறுதிக்கிரியைகள் கப்புதூவில் நடைபெற்றன.

தகவல்: ஆ. ஜெயபாலன் (மகன்)

### நரசிங்கம் முத்துக்குமாரு

புன்னாலைக் கட்டுவன் தெற்கைச் சேர்ந்தவரும்

## அதிகரிப்பு

(துன்னாலை)

யாழ் போதனாவைத்திய சாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காக வருவோரிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

மருந்து எடுப்பதற்காக நீண்ட வரிசையில் காத்திருக்கின்ற இவர்களிடையே யார் முதலில் மருந்து எடுப்பது எனப் போட்டி நிலவுவதும், இதனால் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பிரச்சினைகள் ஏற்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது. (செ-41)

## போராட்டம் கைவிடப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி மாணவர்களது மறியல் போராட்டம் நேற்று முன்தினம் நண்பகல் 12 00 மணியுடன்கைவிடப்பட்டது.

வடக்கு புனர் வாழ்வு வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மற்றும் இந்து கலாசார விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.டி பி அலுவலகத்தூடாகத் தொடர்பு கொண்டு,குறித்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என உறுதியளித்ததைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டதாக மாணவர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ச-60)

அறநிதியச் சபையின்கூட்டம் கடந்த11-ர்திகதி ஞாயிற்றுக்கிழமை தேவஸ்தான உப தலைவரும் சட்டத்தரணியுமாகிய மு சபாநாதன் தலைமையில் தேவஸ்தான பொது அலுவலகத்தில் நடைபெற்றது.

அம்மையாரின் 76 வயதுப் பூர்த்தியை யொட்டி 7ஆம் திகதி ஜனவரி 2001ல் தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் பின்வரும் நிகழ்ச்சிகளை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மாவிட்டபுரத்தைச்சேர்ந்தவரும் தற்போது கொழும்பில் வசிப்பவருமாகிய பொ பாலசுந்தரத்தினால் அறநிதியத்துக்கு அன்பளிப்புச் செய்து நிலையான வைப்பிலிடப்பட்ட ரூபா ஐந்து இலட்சத்தின் இவ்வருட வட்டியை மீளப்பெற்று வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு கல்வி உபகரணம் வழங்குதல்.

சத்திரசிகிச்சைசெய்து மேற்கொண்டு மருந்துகள் பாவிப்பதற்கு வசதியற்றவர்களுக்கு மருந்துகள் கொள்வனவு செய்து வழங்குவதற்கு ரூபா முப்பதினாயிரம் வழங்குதல்.

அம்மையாரின் தற்போது நூல் ஆக்கத்தில் உள்ள 'பெண்மைக்கு இணையுண்டோ' என்ற நூலை வெளியிடுதல்.

யாழ். அரசாங்க வைத்தியசாலையில் 'நல்லசுத்தம்' என்ற பணிக்கு ரூபா இருபதினாயிரம் வழங்குதல்.

(க)

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 156005 ஏ | 156005 பி |
| 156005 சி | 16 460 ஏ |
| 160460 பி | 164254 ஏ |
| 164254 பி | 165720 ஏ |
| 165720 பி | 165720 சி |
| 165720 டி | 165720 ஈ |
| 166914 ஏ | 168963 ஏ |
| 168963 பி | 168963 சி |
| 168969 ஏ | 169031 ஏ |
| 169031 பி | 169031 சி |
| 169031 டி | 169037 ஏ |
| 169037 பி | 169037 சி |
| 169037 டி | 169037 ஈ |
| 169405 ஏ | 169405 பி |
| 169405 சி | 169405 டி |
| 169406 ஏ | 169406 பி |
| 170062 ஏ | 170106 ஏ |
| 170136 ஏ | 170136 பி |
| 170136 சி | 170136 டி |
| 170136 ஈ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 170122 ஏ | 169342 ஏ |
| 169342 பி | 169342 சி |
| 169342 டி | 169991 ஏ |
| 169991 பி | 170122 பி |
| 170122 சி | 170183 ஏ |
| 170183 பி | 170244 ஏ |
| 170244 பி | |

### உடுவில்

| | |
|---|---|
| 160658 ஏ | 160658 பி |
| 160658 சி | 161604 ஏ |
| 161604 பி | 161604 சி |
| 166675 ஏ | 166675 பி |
| 166675 சி | 166675 டி |
| 169199 ஏ | 169199 பி |
| 169977 ஏ | 169978 ஏ |
| 169978 பி | 1701 2 ஏ |
| 170112 பி | 170276 ஏ |
| 170276 பி | 170281 ஏ |

சேரியை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் ஆறுமுகம் 23 ஆம் திகதி சிவபதமடைந்தார்.

இறுதிக்கிரியைகள் கப்புதூவில் நடைபெற்றன.

தகவல்: **ஆ. ஜெயபாலன் (மகன்)**

---

### நரசிங்கம் முத்துக்குமாரு

புன்னாலைக் கட்டுவன் தெற்கைச் சேர்ந்தவரும் கொழும்பில் வசித்தவருமாகிய நரசிங்கம் முத்துக்குமாரு 22. 11. 2000 அன்று காலமானார்.

இறுதிக்கிரியைகள் 26. 11. 2000 அன்று வெள்ளவத்தையில் நடைபெறும்.

தகவல்: **சிவகாமி தர்மபாலா.**

---

### கந்தையா தனபாலசிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் 22 ஆம் திகதி சிவபதமெய்தினார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 26. 11. 2000 அன்று நடைபெறும்.

தகவல்: **ந பாலமுரளி (மருமகன்)**

---

### கந்தையா அன்ரன் செல்வராஜா

(முன்னாள் யா. மா. ச.களஞ்சியப் பொறுப்பாளர்)

யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா அன்ரன் செல்வராஜா 23 ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் காலை 10.30 மணிக்கு நடை பெறும்.

தகவல்: **யூலி ஆன் (மனைவி)**

---

### திருமதி வல்லிபுரம் பூரணம்

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பூரணம் 18 ஆம் திகதி காலமானார்.

இறுதிக்கிரியைகள் மன்னாரில் நடைபெற்றன.

தகவல்: **பொ. பொன்னுத்துரை (பெறா மகன்)**

# ஒக்ரோபர் புரட்சியின் குலுக்கம் இன்னும்பல நாடுகளில் தொடர்கிறது

## வடபகுதி. தொழிற்சங்க பிரமுகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''பாட்டாளிவர்க்க மேதை லெனின் தலைமையில் 1917 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ருஷ்யாவில் நடைபெற்ற ஒக்ரோபர் சோஷலிசப்புரட்சி முழு உலகத்தையுமே குலுக்கியது. காலம் காலமாக அடிமைப்பட்டும், சுரண்டப்பட்டும் இருந்த உழைப்பாளி மக்கள் முதல் தடவையாக உலக நாடொன்றின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள். ஒக்ரோபர் புரட்சியின் குலுக்கம் இன்னும் தொடர்கிறது.

வடபிராந்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் கலைவரும் ஜி. சி. எஸ். யு. வின் யாழ் கிளையின் செயலாளருமான இ. தவராசா ருஷ்ய ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சித் தினப் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய போது மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலையில் கடந்த நவம்பர் 18 ஆம் திகதி நடைபெற்ற இக்கூட்டத்துக்கு மூத்த பத்திரிகையாளர் வீ சின்னத்தம்பி தலைமை தாங்கினார்.

இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் எஸ். தியாகலிங்கம் இக் கூட்டத்தில் பேசும் போது ''ருஷ்ய ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சி முந்திய பல பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் அனுபவங்களைத் தொகுத்து நடத்தப் பட்டது. குறிப்பாக, பார்ஸ் கம்யூன், 1905 ருஷ்யப்புரட்சி ஆகியவற்றின் படிப்பினைகளின் அடிப்படையிலேயே இப்புரட்சி வெற்றிகரமாக நடந்தேறியது. மாக்சிஸம் என்ற அறிவியல்தத்துவம் இப்புரட்சிக்கு வழிகாட்டி ஒளியூட்டியது.

சோவியத்யூனியனின் வீழ்ச்சியுடன் ஒக்ரோபர் புரட்சியின் இலட்சியம் தோற்றுவிடவில்லை. ஒக்ரோபர் புரட்சியின் பாதையில் செல்வதன் மூலம் தான் உலக உழைப்பாளி மக்கள் விமோசனம் பெற முடியும்'' என்று கூறினார்.

முன்னாள் அதிபரும் சன சமூக நிலையங்களின் சமாசத்தின் தலைவருமான எஸ். திருநாவுக்கரசு தமது உரையில் கூறியதாவது,

''லெனின் தலைமையில் நடைபெற்ற ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியும் அவர் ஸ்தாபித்த சோஷலிச சோவியத் யூனியனும் தான் எமது நாட்டு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சரியான பாதையைக் காட்டி நிற்கின்றது.

இனங்களின் சமத்துவமும், ஒற்றுமையும் மாக்சிஸம் வலியுறுத்தும் கோட்பாடுகளாகும். வர்க்க அடிப்படையில் பல்வேறு இன மக்கள் ஓரணியில் நின்று போராடும் போது தான் உண்மையான ஐக்கியம் ஏற்பட முடியும். ஒக்ரோபர் சோஷலிசப்புரட்சி முன்வைத்த இந்த மாக்சிஸக் கோட்பாடுகள் காலத்தால் அழியாதவை.

போரூட் சிரேஷ்ட சமூக அபிவிருத்தி இணைப்பாளர் வி. என். மூர்த்தி மற்றும் அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்க செயலர் மு. சண்முகம், இலங்கை வங்கிஊழியர் சங்கத்தலைவர் சொ. சிவபாலன், காங்கேசன் தொழிலாளர் சங்க பிரதிநிதி எஸ். விசுவலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டனர். (க)

## சுழல் பந்துவீச்சாளர்
# முத்தையா முரளிதரனுக்கு உலகதரத்தில்முதல்இடம்

(சுண்டுக்குளி)

இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் பந்து வீச்சில் உலகத் தரத்தில் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

சர்வதேச ''சியட்'' நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட கருத்துக்கணிப்பில் முரளிதரனுக்கு முதலாம் இடம் கிடைத்துள்ளது. இரண்டாம் இடம் மேற்கிந்திய அணி வீரர் கெட்னி வோலுக்குக் கிடைத்துள்ளது.

அதேவேளைதுடுப்பாட்டத்தில் முதல் 10 இடங்களில் இலங்கை அணியின் கப்டன் சனத் ஜெயசூரியாவும், மாவன் அத்தபத்துவும் இடம் பெற்றுள்ளனர்.

அணிதரப்படுத்தல் பட்டியலில் இந்தியாவுக்கு 9-வது இடமும் பங்களாதேசுக்கு 10-வது இடமும் கென்யாவுக்கு 11-வது இடமும்கிடைத்துள்ளது. (ச-10)

# தனியார் கல்விநிலையங்கள் முன்பாக சைக்கிள்கள் வீதியில்செல்வோர்பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் தனியார் கல்வி நிலையங்கள் முன்பாக வரிசையாக நிறுத்தப்படுகின்ற துவிச்சக்கரவண்டிகளினால் அவ்வீதியால் பிரயாணம் செய்யும் மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே போக்குவரத்தின் போதான இடையூறுகளைத் தவிர்க்க சம்பந்தப்பட்ட கல்வி நிலைய நிர்வாகிகள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

சில தனியார் கல்விநிலையங்கள் அமைந்திருக்கும் வீதிகள் போக்குவரத்தில் இருவழிப் பாதையாகப் பயன்படுத்தப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தீவகப் பாடசாலைகளில் உடற்கல்வி ஆசிரியர் இல்லை

(சுண்டுக்குளி)

தீவக வலயப் பாடசாலைகளில் உடற்கல்வி ஆசிரியர் இன்மையால் அப்பாடசாலைகளின் விளையாட்டுத்துறை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பாக பாடசாலை அதிபர்களும் பெற்றோர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் பல தடவைகள் தொடர்பு கொண்ட போதிலும் இதுவரை எதுவித பயனும் கிட்டவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ச-110

# நீதிமன்றில் குண்டுப்புரளி பொலிஸார் தேடுதல்

(கொழும்பு)

கொழும்புயேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் தொலைபேசி மூலம் கிடைத்த குண்டுப் புரளியால் நீதிமன்றமே அல்லோலகல்லோலப் பட்டது.

நீதிமன்றக் கடமைகள் நடந்து கொண்டிருந்த வேளை, வெடிகுண்டுகள்சகிதம்நீதிமன்றவளவிற்குள்சிலர் புகுந்திருப்பதாக தொலைபேசி மூலம் தகவல் பரப்பப் பட்டது.

இதனால் அங்கிருந்த அனைவரும் பதற்றமடைந்ததுடன் பொலிஸாருக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. பொலிஸார் விரைந்துசென்று நீதிமன்றத்தின் அனைத்து இடங்களையும் அங்கு கூடி நின்றவர்களையும் சல்லடை போட்டுத்தேடினர். இருந்தும் குண்டுகள் எதுவும் இருக்கவில்லை. (உ)

# அன்னையின் பெயரில் ஆய்வு நூலகம்

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 76 வது பிறந்ததினமாகிய எதிர்வரும் தைமாதம் 7 ஆம் திகதியன்று தெல்லிப்பழையில் ''சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வு நூலகம்'' அமைப்பதற்குரிய அடிக்கல் நாட்டும் வைபவம் இடம் பெறவுள்ளது.

இந்நூலகம் சைவ, தமிழ்: இலக்கண, இலக்கிய நூல்களையும், தேடிப்பெறமுடியாத பல அரிய நூல்களையும் கொண்ட நூலகமாக அமைப்பதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது.

சுமார் 30 லட்சம் ரூபா செலவில் அமையப்பெறவுள்ள இந்நூலகத்தின் ஆரம்பநிதியாக, நான்குலட்சம் ரூபாவினை செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ஸ்ரீ)

# ரெலோ அலுவலகத்திற்கு பாதுகாப்பு இல்லை

தற்பாதுகாப்பின் பொருட்டு இராணுவத்தினரால் ரெலோ அமைப்பினருக்கு முன்னர் வழங்கப்பட்ட கிரனேட்டுகளை இராணுவத்தினரிடம் கையளித்து விட்டதாக ரெலோவின் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

தற்போது ரெலோ அமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கு மட்டுமே பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், ரெலோ காரியாலயத்திற்கோ ரெலோவின் சிரேஷ்ட தலைவர்களுக்கோ எந்தவிதமான பாதுகாப்பும் வழங்கப்பட வில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [ம]

# சங்கேமுழங்கு

## பெண்களை அவமதிப்போர் திருந்தமாட்டார்களா?

பெண் என்றால் பேயும் இரங்கும் என்னும் நிலை மாறி; பெண்ணைக்கண்டால் பிணமும் எழும்பும் என்னும் நிலை உருவாகின்றது

சில வீணர்கள் பெண்களைக் கண்டால், அவர்களின் பின்னால் வீணுக்கு அலைகின்றார்கள் இப்படியானவர்களுக்கு தொழில் என்று எதுவும் இல்லை பெண்களின் பின்னால் அலைவதே இவர்களது பிரதான தொழில்

வடமராட்சி, கரவெட்டிப் பகுதி பாடசாலை ஒன்றின் முன்னால் பாடசாலை நேரத்தில் சினிமாக் கதாநா(ய்)யகர்களாகத்தம்மை எண்ணி, அலங்கரித்துக் கொண்டு, மாணவிகளிடம் வம்பு செய்வதும் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பிரயோகிப்பதும் வழக்கமாகி விட்டது

இந்த நா(ய்)யகர்களுக்கு உடன் பிறந்த சகோதரிகள், அண்ணன் மகள், அக்காமகள் உறவு இல்லையா?. இந்த ஈனஜென்மங்களுக்கு தகுந்த படிப்பினை வழங்க எவருமில்லையா?

வவுனியா நீதிமன்றம் பிறப்பித்துள்ள நடைமுறையை இங்கும் பிறப்பித்தாலாவது இவர்களைத் திருத்த முடியாதா?

தெரு நாய்களை அழிக்க மாநகரசபை; இக் கதாநாய்களை அழிக்க யார்?.

ஒரு மாணவியின் தாய்

# ஆசிரியர் செயலமர்வு

(துன்னாலை)

தென்மராட்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான ஆசிரியர் செயலமர்வு நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி கல்விக் கோட்டத்துக்கான செயலமர்வு இன்றும், பளை, கொடிகாமம் கல்விக்கோட்டங்களுக்கான செயலமர்வு வரும் மாதம் 2 ஆம் திகதியும் நடைபெறும்.

இதில் 1 A B. 1 தரப் பாடசாலைகளில் இருந்து அதிபர், பிரதி அதிபர் அல்லது உப அதிபர்களை கலந்து கொள்ளுமாறும் ஏனைய 2 ஆம், 3 ஆம் தரப் பாடசாலை அதிபர்களையும் இச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார். (உ-41)

# அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பிரான் பற்று சனசமூக நிலயத்தின் அடிக்கல் நாட்டு விழா கடந்த புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

மானிப்பாய்பிரதேசசபைத் தலைவரும் மானிப்பாய் தொகுதி ஈ. பி. டி பி அமைப்பாளருமான வே. சு. ஜோன்சன் (ஜீவா) இக்கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்

இந்நிகழ்வில் சனசமூக நிலயத் தலைவர், கிராம சேவையாளர் மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதே தினத்தன்று மாதகலில் புதிய சந்தைக்கான அடிக்கல் நாட்டு விழாவும் இடம்பெற்றது.

ரூபா 2 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ள இக்கட்டடத்திற்கான அடிக்கல்லையும் இவர் நாட்டினார்.

இந்நிகழ்வில் மாதகல்கடற்றொழில் சங்கத் தலைவரும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (ச)

# இளம் பெண் மரணம்

(மந்திகை)

சுகயீனம் காரணமாக இடம்பெயர்ந்து கரவெட்டி திரு இருதயகல்லூரி முகாமில் தங்கியிருந்த மந்துவில் கிழக்கைச்சேர்ந்த சின்னத்தம்பி அருந்ததி [வயது 26] மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது. (கு-23)

# இராசி பலன்

25-11-2000
(கார்த்திகை 10, சனி)
அமாவாசை பி இ 5 06 வரை
விசாகம் பி.ப 4.43 வரை
ராகுகாலம் 9.12– 10.42
சுபநேரம் 3.12– 4.42
சித்தம் அமாவாசை விரதம்

**மேடம்**
எதிர்பாராத அச்சம், நோய் உண்டாதல், செல்வாக்கு, பிரயாண பயம்

**இடபம்**
பிரயாணம், தனவரவு, போசன சுகம், குழம்பிய நிலை.

**மிதுனம்**
சந்தோசமான சம்பவம், காரிய அனுகூலம், தொழில் விருத்தி, சத்துருஜெயம்

**கடகம்**
ரோகம், மனக்கவலை, முயற்சி தாமதம், தனவரவு.

**சிங்கம்**
கலகம், நம்பிக்கைக்குறை பயந்த சுபாவம், காரியதாமதம்

**கன்னி**
பிரயாணம், அரசநன்மை, குடும்ப சுகம், சகோதரர் உதவி, நிலைக்கேடு.

**துலாம்**
வாக்குக்கலகம், காரியதாமதம், மனக்கிலேசம், தனவிரயம்.

**விருச்சிகம்**
உஷ்ணரோகம், தெய்வ சிந்தை, பணவரவு. பிரயாணம்.

**தனுசு**
சயனசுகக்குறைவு, காரிய நட்டம், பிரயாணம், அபகீர்த்தி.

**மகரம்**
தனலாபம், கௌரவம், உடல் பூரிப்பு, காரியஜெயம்.

**கும்பம்**
முயற்சிகள் கைகூடும், பணிவு, பெரியோர் சந்திப்பு, அதிகாரம்.

**மீனம்**
பிரயாணம், கட்டுப்பாடு, வயிற்றுக் கோளாறு, பயந்த சுபாவம், காரிய தாமதம்.

(பழையநேரப்படி கணிப் பிடப்பட்டது.)

வளவன்

# அனுமதி நீடிப்பு

[யாழ்ப்பாணம]

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் 2000 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை அனுமதித்தலுக்கான முடிவு திகதி 1.12 200 வரைநீடிக்கப்பட்டுள்ளதாகக் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (ச)

# செய்தித் துளிகள்

## தடுப்பு மருந்து வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியில் உள்ள கால் நடை வைத்தியசாலையில் வாரம் தோறும் வெள்ளிக்கிழமைகளில் கோழிகளுக்கு அம்மைத் தடுப்பூசி போடப்படவுள்ளதாகவும் சனிக்கிழமைகளில் 'றனிக்கட்' 'கப்போறா' போன்ற மருந்து வகைகளும் வழங்கப்படும் என்றும் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்; மேற்படி வைத்தியசாலை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும். 9. 00 மணி தொடக்கம் ந பகல் 12. 00 மணி வரை திறந்திருக்கும் என்றும் ஆடு மாடுகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்த வேண்டி இருப்பின் காலை 10. 30 மணிக்கு முன் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் பிறக்கும் கன்றுகளுக்கு குடற்புழுநீக்கி மருந்து வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்:

இன்றுமுதல் பற்றுச் சீட்டுடன் வந்து மேற்படி மருந்தை பெற்றுக் கொள்ளுமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மாதாந்த உதவிப்பணம்

(மந்திகை)

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்தஉதவிப்பணம் பெறுவோருக்கான நவம்பர் மாத கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறது.

ஆழியவளை, தாளையடி, செம்பியன் பற்று, நாகர் கோயில் ஆகியஉபதபாலகங்களில் ற்றுநேய், கா நோய் பொதுசன உதவிப்பணம் ஆகியவற்றை பெற்றவர்கள் உபயகதிர்காமம் வீதியில் அமைந்துள்ள நாகர்கோவில் உபஅலுவலகத்தில் இன்று 25ஆம் திகதிக்கு முன்பு பெற்றுக்கொள்ளுமாறு உபதபால் அதிபர் கேட்டுள்ளார். (ந-23)

## டெங்குவினால் 4 பேர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 15 நாட்களுள் டெங்குக் காய்ச்சலால் நான்கு பேர் பலியாகியுள்ளனர்.

காத்தான் குடிப் பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும், ஏறாவூரைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு பலியாகியுள்ளனர்.

டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த மட்டக்களப்பு மாகாண பிரதி சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம் துரித நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. (ச-60)

## வீடுகள் அமைப்பு.

(மட்டக்களப்பு)

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர்மகிந்த ராஜபக்ஷவிடம் மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் யோசப்பரராஜசிங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்துமட்டக்களப்பு மாவட்டத்தில் மீனவர் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 250 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இவ்வீடுகள் உறுகாமம், மங்கிக்கட்டு,உன்னிச்சை மற்றும் கோட்டை முனை உட்பட பல இடங்களில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ச-60)

## இரண்டாயிரம் கொடுப்பனவு

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கான ரூபா-2000 கொடுப்பனவு கடந்த 21 ஆம் திகதி முதல் சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் தினமும் பி.ப 2. 00 மணி முதல் வழங்கப்பட்டு வருகிறது

இதன் பிரகாரம் நேற்று 24 ஆம் திகதி ஜே-148 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 227 பேருக்கும் 25-ஆம் திகதி ஜே-138 பிரிவைச் சேர்ந்த 337 பேருக்கும், ஜே-136 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பட்டியல் 6 இலிருந்து 10 வரை தவறவிடப்பட்ட சகல பிரிவுக்கும் வழங்கப்படும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன்தெரிவித்துள்ளார். (ச-120)

## பதவி உயர்வு

(கொழும்பு)

ஒருதமிழர்உட்படசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் எட்டு பேர் உதவிப் பிரதி பொலிஸ்மா அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (வ)

## வீதிதிருத்தம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட நல்லூர் கொண்டலடி வீதி பல வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக இருப்பதால் அவ் வீதி வழியாக பயணம் செய்வோர் பலவித சிரமங்களின் மத்தியில் பயணம் செய்ய வேண்டியுளது. என மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (உ)

## வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

பல வருடங்களாகக் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட நல்லூர் குறுக்குவீதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் இலகுவாகப் பயணம் செய்ய முடிவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## பாடசாலை விடுமுறை

(மட்டக்களப்பு)

நாட்டிலுள்ள சகல முஸ்லிம்பாடசாலைகளுக்கும் மூன்றாம் தவணைக்காக நேற்று முதல் மூடப்படுகிறது.

தமிழ், சிங்களப் பாடசாலைகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி மூடப்படவுள்ளன.

அதேவேளை சகல பாடசாலைகளும் புதிய தவணைக்காக ஜனவரி முதலாந் திகதி திறக்கப்படும் என கல்வித் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (ச-60)

## உண்டியல் உடைப்பு

(நல்லூர்)

தாவடி தெற்குநெல்லொருபகுதிப் பிள்ளையார் ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டுப் பணம் திருடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (உ-103)

## இராஜகோபுரம் அமைப்பு

(நல்லூர்)

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய புதிய இராஜகோபுரத்தின் கட்டிட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன கோபுர முன் வாயில் மணிமண்டபம் அமைக்கும் பணியும் மேற் கொள்ளப்பட்டுள்ளது. (உ-103)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## சைவசமயம் பகுதி - 1

ஆக்கம்: திருமதி அமுதவல்லி தவராஜசிங்கம்
(மல்லாகம் மகாவித்தியாலயம்)

1 முதல் 40 வரையான ஒவ்வொரு வினாவிலும் 1,2,3,4 என எண்ணிடப்பட்டுள்ள விடைகளுள் சரியானது அல்லது மிகப் பொருத்தமானது என நீர் கருதும் விடையைத் தெரிவு செய்க.

01) இந்துக்களின் சிந்தனைச் சிகரமாக விளங்கும் நூல்.
1) வேதம் 2) ஆகமம் 3) உபநிடதம் 4) சாஸ்திரம்

02) தனு, கரண, புவன, போகங்களை நிலைத்து நிற்கச் செய்தல்.
1) படைத்தல் 2) காத்தல் 3) அழித்தல் 4) அருளல்

03) யாகங்கள் செய்வதற்கு பின்பற்ற வேண்டிய சடங்குகள் பற்றிக் கூறும் நூல்.
1) சங்கிதைகள் 2) ஆரணியங்கள்
3) பிராமணங்கள் 4) உபநிடதங்கள்

04) அட்டோத்திரநாம அர்ச்சனையில் இறைவனுக்கு அளிக்கும் நாமங்களின் எண்ணிக்கை.
1) 100 2) 108 3) 1000 4, 1008

05) திருவாசகப்பாடலுக்கு ஏற்ற சிறப்புடைய பண்.
1) மோகனம் 2) ஆனந்தபைரவி 3) பஞ்சமம் 4) சண்முகப்பிரியா

06) வடமொழிப்புராணங்களின் எண்ணிக்கை.
1) 12 2) 14 3) 18 4) 28

07) ''இராஜராஜேஸ்வர மகாதேவன் கோயில்'' எனச் சிறப்புப் பெயர் பெற்ற ஈச்சரம்.
1) நகுலேச்சரம் 2) முன்னேச்சரம்
3) திருக்கோணேச்சரம் 4) திருக்கேதீச்சரம்

08) உஷக்காலப்பூசை வேறு எவ்வாறு அழைக்கப்படும்.
1) உச்சிக்காலப்பூசை 2) விடியற்பூசை
3) அதிவிடியற்பூசை 4) காலைச் சந்திப்பூசை

09) சடையனார் இசைஞானியார் ஆகியோரைப் பெற்றோராகக் கொண்ட நாயனார்.
1) சம்பந்தர் 2) அப்பர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

10) இராமரை பீடித்த பிரமகத்திதோஷம் நீங்கிய பெருமைக்குரிய ஈச்சரம்.
1) திருக்கேதீச்சரம் 2) திருக்கோணேச்சரம்
3) நகுலேச்சரம் 4) முன்னேச்சரம்

11) ''தென்னவன் பிரமராஜன்'' என்னும் பட்டத்தை மாணிக்கவாசகருக்கு அளித்த மன்னன்.
1) இராஜராஜசோழன் 2) அபயகுலசேகரன்
3) அரிமர்த்தனபாண்டியன் 4) கூன் பாண்டியன்

12) நினைத்தவாக்கு நிலையான பயன் தருவது.
1) மந்திரம் 2) தோத்திரம் 3) சாத்திரம் 4) காப்பியம்

13) திருப்பல்லாண்டு, திருவிசைப்பா ஆகிய இரண்டும் அருளிய அடியவர்
1) திருமாளிகைத்தேவர் 2) சேந்தனார்
3) பட்டினத்தடிகள் 4) சேக்கிழார்

14) ஆலயங்களில் அதிகாலையிலே இறைவனை எழுந்தருள வேண்டிப்பாடும் பாடல்
1) திருப்பாவை 2) திருவெம்பாவை
3) திருப்பள்ளியெழுச்சி 4) திருவாசகம்

15) திங்கள் தோறும் சிறப்பாகச் சிவனைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதம்.
1) சுக்கிரவாரம் 2) பிரதோஷம் 3) சோமவாரம் 4) சதுர்த்தி

16) திருத்தொண்டர்புராணம் இயற்றியவர்.
1) அருண் மொழித்தேவர் 2) அருணந்திதேவர்
3) அருணந்திசிவாச்சாரியார் 4) அருணகிரிநாதர்

17) பயன்கருதிச் செய்யப்படும் பூசை.
1) நித்தியபூசை 2) நைமித்தியபூசை 3) காமியபூசை 4) நிஷ்காமியபூசை

18) சிவதொண்டன் என்னும் மாத இதழை வெளியிட்டவர்.
1) கடையிற்சுவாமி 2) செல்லப்பாசுவாமி
3) யோகர்சுவாமி 4) திருமூலர்

19) சுந்தரர் திருக்கேதீச்சரப் பெருமானை மானசீகமாக துதித்துப் பாடிய இடம்.
1) திருக்கேதாரம் 2) திருவாரூர் 3) இராமேச்சரம் 4) மாதோட்டம்

20) நம்பியாண்டார் நம்பி தொகுத்த திருமுறைகளின் எண்ணிக்கை.
1) 7 2) 9 3) 11 4) 12

## விடைகள்

இம் மாதம் 23 ஆம் 24ஆம் திகதிகளில் வெளியான க.பொ.த (சா/த) தமிழ் மொழியும் இலக்கியமும், பகுதி 1 வினாத்தாளிற் குரிய விடைகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 4 | 2) | 1 | 3) | 2 |
| 4) | 3 | 5) | 4 | 6) | 4 |
| 7) | 1 | 8) | 2 | 9) | 4 |
| 10) | 3 | 11) | 4 | 12) | 1 |
| 13) | 2 | 14) | 1 | 15) | 1 |
| 16) | 2 | 17) | 4 | 18) | 2 |
| 19) | 4 | 20) | 2 | 21) | 4 |
| 22) | 3 | 23) | 2 | 24) | 1 |
| 25) | 2 | 26) | 2 | 27) | 3 |
| 28) | 2 | 29) | 1 | 30) | 3 |
| 31) | 4 | 32) | 2 | 33) | 4 |
| 34) | 2 | 35) | 3 | 36) | 1 |
| 37) | 2 | 38) | 3 | 39) | 4 |
| 40) | 4 | | | | |

## யாழ். நுண்கலைப்டபீத்திற்குத் தெரிவானோர் விபரம்

(கந்தர்மடம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பீடத்திற்கு 1999/2000கல்வியாண்டிற்கு புதிதாகமீண்டும்மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வன்னிமாவட்ட மாணவர்களுக்கென நடத்தப்பட்ட விசேட பரீட்சை மூலம் இவர்கள் தெரிவாகியுள்ளனர்.

சித்திரமும் வடிவமைப்பும் கற்கைக்கு

எஸ்.அருட்குமரன்எம்.மனோகர், எஸ் ஜெகதீபன், எஸ். தர்மதாஸ்,எஸ். பிரசாந்தன், என்.விஜயராஜ், பி.மகேசன், கே. ஜெகதீஸ்வரன், ஆர். ஜெகதீபன், பி. உமாமகேஸ்வரி, எஸ். சிவகுமார்

சங்கீத கற்கைக்கு

எஸ். சுயித்தா, பீ. நீரஜா, கே. கவிதா, எஸ். கலைவிழி ஆர். வளர்மதி, பி. ஜெயகிரிஸ்ரீனா என்போரும்.

வயலின், வீணை, மிருதங்கம் என்பவற்றிற்கு

என். உதயராஜினி, சி. தனுசியா,லெற்றிகா கிருஸாந்தி, வி.கவிதா,ரி.காந்தினி ரி:திருமகள், கே. பிறேமமாலினி, ரி. சிவாஜினி, ஆர். சுபாஜினி என்போரும்தெரிவு செய்யப்பட்டுள்னர் என யாழ்.பல்கலைக் கழகத்துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ச.37)

## இன்று ஒரு தகவல்

# விலையும் மதிப்பும்

இரானின் பாதுஷாவான ஹாருன் அல் ரஷீத் பெரும் பேரரசர். அளவற்ற செல்வம், இவற்றால் பெரும் மமதை கொண்டிருந்தார். அவரிடம் அபுஷகீக் எனும் முஸ்லிம் கஃபிதுறவி வந்தார். 'பேரரசே! உங்கள் செல்வம், நாடு இவற்றின் மொத்த மதிப்பு எவ்வளவு இருக்கும்' என்றார்.

பேரரசர்: 'ஏன் அதைப் பற்றிக் கேட்கிறீர்கள் நல்லவரே' என்றார்.

முனிவர்: 'கேளுங்கள் மன்னவா! நீங்கள் ஸஹாரா பாலைவனத்தில் அலையும் போது, உங்களுக்குப் பெரும் தாகம் எடுக்கிறது. இன்னும் ஒரு நிமிடத்தில் தாகத்தால் மரணமே வரும் என்று தோன்றுகிறது. அப்போது ஒரு தம்ளர் குடிநீருக்கு நீங்கள் என்ன விலை கொடுப்பீர்கள்' என்றார்.

மன்னர்: 'என் நாட்டில் பாதியைக் கொடுத்துவிடுவேன்' என்றார்.

முனிவர்: நீங்கள் பெரும் நோயில் சிக்கிச் சாகும் தறுவாயில் இருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். பெரிய பெரிய வைத்தியர்கள் மருத்துவம் செய்தும் பயனில்லை. அப்போது ஒரு புதியவர் உங்கள்நோயைத் தீர்க்கவல்ல ஒரு மருந்துப் பொட்டலத்துடன் வருகிறார். அந்த மருந்துக்கு என்ன விலை கொடுப்பீர்கள்?' என்றார்.

மன்னர்: 'என் நாட்டின் இன்னொரு பாதியைக் கொடுத்துவிடுவேன்' என்றார்.

முனிவர்; 'அப்படியானால் மன்னவரே, உங்கள் நாட்டின் மதிப்பு ஒருதம்ளர் தண்ணீரும் ஒரு பொட்டலம் மருந்தும் தானே இதை பற்றிக் கர்வம் கொள்ள என்ன இருக்கின்றது?' என்றார்.

மன்னர் அந்தஅறிவுரையை மனமுவந்து ஏற்று முனிவருக்குநன்றி கூறினார்.

நன்றி
**விவேகவாணி**

# மாணவரின் அறிவு வளர்ச்சியில் ஆசிரியருடன் பெற்றோரும் இணைதல் அவசியமாகும்

(யாழ்ப்பாணம்)
''ஆரம்பக் கல்வி மாணவர்களின் வளர்ச்சியில் ஆசிரியருடன் இணைந்து பெற்றோரும் உதவி புரிய வேண்டும்'' என்று அண்மையில் நடைபெற்ற சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. தற்பரானந்தன் தெரிவித்தார்.

அதிபர் ஏரம்பமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

ஆசிரியர்கள் எதுவித சிரமங்களையும் கருத்திற்கொள்ளாது மேலதிக வகுப்புக்களை நடத்தி மாணவரின் கல்வித் தரம் சிறந்த நிலையை அடைய உதவியுள்ளனர். இதன் பிரதிபலிப்பே உடுவில் கல்விக் கோட்டப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் முதன்மை நிலையில் அமைந்துள்ளன என்று பகர்ந்துள்ளார்.

பாடசாலை விழாவில் சிறப்பு விருந்தினராக ஆறு. திருமுருகன் மற்றும் முன்னாள் அதிபர்களான க.தெட்சணாமூர்த்தி திருமதி பா. சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

## படைத்தரப்பில் ஒருவர்காயம்

(யாழ்ப்பாணம்)
மட்டுவில் தெற்கில் அண்மையில் மிதிவெடி அகற்றிக் கொண்டிருந்த போது, அது வெடித்ததில் படைத்தரப்பில் ஒருவர் படுகாயம் அடைந்தாக விஷேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை நாகர்கோயில் பகுதியில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ஸ்ரீ)

# யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனம் மூடப்படுகிறது

(வண்ணார்பண்ணை)
யாழ். உயர்தொழில் நுட்ப நிறுவனம் மூன்றாம்தவணை விடுமுறைக்காக முழுநேரக் கற்கைநெறி மாணவர்களுக்கு நேற்று 24 ஆம் திகதியும் பகுதி நேரக் கற்கைநெறி மாணவர்களுக்கு எதிர்வரும் 26 ஆம் திகதியும் மூடப்படவுள்ளது.

அதேவேளை 2000 ஆம் ஆண்டின் அனைத்துக் கற்கை நெறி மாணவர்களுக்குமான இறுதிப்பரீட்சை அநேகமாக டிசெம்பர் மாதநடுப்பகுதியில் இருந்து நடைபெறலாம் எனவும் மேற்படி நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-109)

## இறங்குதுறை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறை கரம்பன் மேற்கு கண்ணகை அம்மன் இறங்குதுறை 20 இலட்சம் ரூபா செலவில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ் இறங்குதுறை விரைவில் பொதுமக்களின் பாவனைக்கு விடப்படவுள்ளது. இதனால் மக்கள் சிரமமின்றி தமது பயணத்தை மேற்கொள்ள முடியுமென்று தெரிவிக்கப்படுகிறது. (க-3)

# பயண அனுமதிக்காக செல்வோர் சிரமம்

(ஈச்சமோட்டை)
யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி பெறுவதற்காக றான்-(RRAN) அலுவலகத்திற்குச்செல்லும்பொதுமக்கள் மழையிலும், வெய்யிலிலும் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பயண அனுமதியைப் பார்வையிடுவோர், பயணிக்கற் பெறுவோர் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலையிருப்பதனால் மழை, வெய்யிலில் சிரமமுறா வண்ணம் கூடார வசதிசெய்தால் பொது மக்களுக்குவசதியாகவிருக்கும் என பொது மக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-59)

# மலையகத்தில் புதிய தொழிற்சங்கம்

(பண்டாரவளை)
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அதிருப்தியாளர் குழு புதியதொரு தொழிற் சங்கத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

இலங்கைத் தொழிலாளர் ஜனநாயக முன்னணி என்ற பெயரில் புதிய அமைப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் புதிய அமைப்பை அமைப்பதில், பி. பி. தேவராஜ், எஸ். இராஜரட்ணம், எஸ். சதாசிவம், ஏ. எம். வி. இராஜன், டி. வி. சென்னன் ஆகியோர் ஈடுபட்டுள்ளதாகவும், இப்புதியதொழிற் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு விரைவில் நடைபெறவுள்ளதாகவும் எஸ். சதாசிவம் 'வலம்புரி'க்குத் தெரிவித்துள்ளார். (வ)

## கடத்தப்பட்ட பெண் மீட்பு

(கொழும்பு)
தம்புல்ல கொட்டலில் தங்கியிருந்த இங்கிலாந்துப் பெண் மணி கடந்த திங்கட்கிழமை காணாமற் போய் நேற்று பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்

தம்புல்ல பொலிஸாரும் விமானப்படையினரும் இணைந்து காட்டுப்பகுதியில் நடத்திய தேடுதலின்போது இப்பெண் கண்டுபிடிக்கப்பட்டு தற்போது தம்புல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண்ணின் உடலில் சில காயங்கள் காணப்பட்டதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ள அதேவேளை இது தொடர்பான மேலதிக விடயங்கள் தெரிவிக்கப்படவில்லை. (க-5)

# பாடசாலை ஆசிரியரால் தாக்கப்பட்ட மாணவன் தற்கொலை முயற்சி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பாடசாலையில் கற்பிக்கும்ஆசிரியர் ஒருவரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் மாணவன ஒருவன் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட சமயம் தாயாரின் சமயோசித முயற்சியால் தடுக்கப்பட்ட சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

ஜெயபாலன் கறிஷன் (வயது-16) கோண்டாவில் என்பவரே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவராவர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

பிரஸ்தாப மாணவன் பாடசாலை மைதானத்தில் உடற்பயிற்சி முடித்துவிட்டு வகுப்பறைக்குச் செல்லும்போது ஒழுங்காகச் செல்லாததால் கோபம்கொண்ட ஆசிரியர் ஒருவர் பிரஸ்தாப மாணவன் உட்பட பலரை தண்டித்ததாகவும் சம்பந்தப்பட்ட மாணவனுக்கு பலத்த காயம் ஏற்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இச் சம்பவம்ஏதும் அறியாத வேறு ஆசிரியர் ஒருவர் பாடசாலைக்கு செலுத்த வேண்டிய பணத்தை உடன் கொண்டுவந்து கட்டுமாறு உத்தரவிடவே வேறு வழியின்றி சம்பந்தப்பட்ட மாணவன் வீடுசென்று நச்சுத் திராவகத்தை உட்கொள்ள முயற்சித்ததாகவும் தாயார் தடுத்து விட்டதாகவும் அறியப்படுகிறது.

எனினும் பிரஸ்தாப மாணவன் தகப்பனார்மூலம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அடிகாயங்களுக்கு சிகிச்சை பெற்று வருவதாகவும் மேலும் அறியப்படுகிறது.

மாணவனை கண்டித்து திருத்த வேண்டியது ஆசிரியரின் கடமை என்பதனை ஏற்றுக்கொள்ள முடிகிறது என்றாலும் ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறுமளவிற்கு படுமோசமாகத் தாக்குவது என்பது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்று எனப் பெற்றோர் தரப்பில் பலத்த அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

# எம்.பிகளுக்குவழங்கப்பட்ட மதுபான விற்பனை அனுமதி தடைசெய்யவேண்டும்

(கொழும்பு)
பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மதுபான விற்பனை நிலைய அனுமதிப் பத்திரத்தை தடை செய்ய வேண்டும் அத்துடன் பாடசாலைகள் வழிபாட்டுத் தலங்கள் என்பவற்றுக்கு சமீபமாக உள்ள மதுபான விற்பனை நிலையங்களை மூட வேண்டும்.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின்நிறைவேற்றுச்குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா தலைமையில்இடம் பெற்றநிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில்வன்முறைகளின் அதிகரிப்பைக்கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு முன்னேற்பாடாகவே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன்வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக கட்சியின் நிறைவேற்றுக்குழு ஆராய்ந்து மரண தண்டனையை அமுல்செய்வது வழக்குகளில் ஏற்படும் தாமதங்களை தவிர்ப்பது தொடர்பான சட்டங்களில் திருத்தங்கள் மேற் கொள்ளப் படவேண்டுமென்றும் முடிவு செய்துள்ளது. (இ-5)

# சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களைபாதுகாக்க விசேட நடவடிக்கை

(கொழும்பு)
பிந்துனுவெவ தடுப்புமுகாமில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து களுத்துறை. பூசா வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் உபாலி சமர சுந்தர தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின்பாதுகாப்புதொடர்பாக சிறைச்சாலைத்திணைக்களம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும், பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பொலிஸ்மா அதிபருக்கும், இராணுவத் தளபதிக்கும் உத்தர விட்டுள்ளார்.

இதன் காரணமாக மேற்படி சிறைகளில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக உபாலி சமரசுந்தர மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

## விபரம் திரட்டல்

யாழ்ப்பாணம் ஸ்ரீசத்யசாயி வடபிராந்திய இணைப்புக்களின் சார்பிலான இளைஞர் பிரிவினர் ஆனைக்கோட்டை முள்ளிக்கிராமப் பகுதியிலுள்ள குடும்பங்களின் விபரங்களைத் திரட்டி வருகின்றனர்.

இதற்காக அப்பகுதியிலுள்ள மக்களோடு உரையாடி அவர்களின் நிலைமைகளை ஆராய்ந்து வருகின்றனர். (ச-14)

## அனுமதி பெறாது மதுவிற்பனை

(மந்திகை)
வடமராட்சி தெற்கு மேற்கு பகுதிகளில் அனுமதி பெறாது மதுபானம் விற்பனை செய்யப்படுவதாகவும், இவ்வாறானவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உதவி அரசாங்க அதிபர் எஸ் ஸ்ரீநிவாசனிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக நெல்லியடியைஅண்டிய பகுதிகளில் இவ்வாறான விற்பனை நிலையங்கள் அதிகரித்துள்ளதாகவும் சில விற்பனை நிலையங்கள் ஒரு அனுமதிப்பத்திரத்துடன் பல நிலையங்கள் அமைத்து இயங்குவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தம்பசிட்டி, உடுப்பிட்டிப் பகுதிகளில் தேனீர்க்கடைகள், உணவுப் பொருள் விற்பனை நிலையங்களிலும் மதுபானம விற்பனை செய்வதை அவதானிக்க முடிகிறது. (க-23)

## நிரந்தர நியமனம்

(மந்திகை)
யாழ் குடாநாட்டில் உப அஞ்சல் அலுவலகங்களில் பதில் அஞ்சல் உப அதிபராகக் கடமையாற்றுவோர் விரைவில் நிரந்தர நியமனம் பெறவுள்ளதாக தபால்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் ஆகஸ்ட் 21ஆம் திகதி வரை பதில் கடமையாற்றியோருக்கே இந்நியமனம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பதில் கடமை புரிவோருடைய சான்றிதழ்களைக் கோரும் சுற்று நிருபம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-23)

**சந்தன மரக் கடத்தல்**

# வீரப்பனைப் பிடிப்பதற்கு ஆயுதம் வழங்க மத்திய அரசு எப்போதும் தயார்

(சென்னை)

சந்தனக் கடத்தல் வீரப்பனை பிடிக்க தமிழக அரசுக்கு நவீன ஆயுதங்களும் படையும் உதவ மத்திய அரசு தயார் என்று மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வாணி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தமிழகம் வந்து மத்திய அமைச்சர் அத்வாணியை தமிழக முதல்வர் மு. கருணாநிதியின் வேண்டுகோளின பேரில் தமிழகம் காவல் துறை ஆணையாளர் மற்றும் தமிழக பொதுச் செயலர் உள்துறைச் செயலர் ஆகியோர் சந்தித்தனர்.

அவ் வேளை கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க எடுத்த எத்தனங்களையும் பங்கு கொண்டோரையும் இறுதியில் ராஜ்குமார் எப்படி விடுவிக்கப்பட்டார் போன்ற விபரங்களையும்எடுத்துக் கூறினர்.

நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க எடுத்த முயற்சிகளுக்கு இரு மாநில அரசுகளையும் பாராட்டினார்.

இதே வேளை மத்திய அரசு எந்த வகையில் உதவலாம் என்று ஆலோசிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு அத்வாணி நவீன ரக ஆயுதங்களையும் அதிரடிக் கமாண்டோக்களையும் வீரப்பனைப் பிடிப்பதற்கு அனுப்புவதாகவும் தெரிவித்தார். (து)

**உலக தரிசனம்**

## சுஹார்ட்டோ மீதான வழக்கில் சட்டப் பிரச்சினை

(ஜகார்த்தா)

இந்தோனேசிய முன்னாள் அதிபர் சுஹாட்டோ மீதான ஊழல்வழக்கினை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் போவதாகஅரசு அறிவித்தது.

இப்படித் தாக்கல் செய்ய முடியாதென்றும் சாதாரண நீதிமன்றில் விசாரிக்கத அதிபர் மீதான வழக்கினை எப்படி உச்ச நீதிமன்றததுக்கு கொண்டு செல்ல முடியும் என்று சுஹாட்டோவின் வழக்கறிஞர் சட்டப்பிரச்சினை எழுப்பியிருக்கிறார். (து)

## சிரியாவில் ஆயிரம்பேர் விடுதலை

(டமஸ்கஸ்)

சிரிய அதிபர் பஷாரில் அஸாத் சிறு குற்றங்களுக்காகச் சிறைவைக்கப்பட்டிருந்த ஆயிரம் பேரை விடுதலை செய்துள்ளார்.

சிறுகுற்றங்களுக்காக குற்றப்பணம் கட்டமுடியாது சிறைத்தண்டனை யில் இருப்போரையும் மற்றும் சிறுகுற்ற சிறைக்கைதிகளையும் அதிபர் விடுவித்துள்ளார்.

கடந்தவாரமும் அறுநூறு அரசியல் கைதிகளை அதிபர் அஸாத் விடுதலை செய்தது குறிப்பிடத்தக்கது. (து)

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வாக்கு எண்ணல் தடைப்பட்டது

[வாஷிங்டன்]

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வாக்கெண்ணலில் பிரச்சினைக்குள்ளான புளோரிடா மாநிலத்தில் கையால் வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் மியன்மீர் மாவட்டத்தில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என அறிக்கப்படுகிறது.

மியன்மீர் மாவட்டத்தில் வாக்குகள் எண்ண கெடு போதவில்லையென்றும் அதனால் எண்ண முடியாதென்றும் நீதிமன்றத் தீர்ப்பை தேர்தல் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜோர்ச் டபிள்யூவிற்கு சொந்தமான மாநிலமான புளோரிடாவில் இவரின் சகோதரர் ஆளுநராக இருப்பதாலும் மியன்மீர் வாக்குகள் எண்ணாமல் போனதற்குக் காரணமென்றும் அல் கூரின் ஆட்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை அல்கூரின் ஜனநாயகக்கட்சி மேல்முறையீட்டு உச்சநீதிமன்றத்திற்கு இது தொடர்பான வழக்கினைத் தாக்கல் செய்ய இருக்கின்றனர்.

அடுத்த ஆண்டு ஜனவரி ஆறாந்திகதி கிளின்டனின் பதவிக் காலம் முடிவடைவதால் அதற்கு முன் தேர்தல் முடிவுவந்தால் சரியென்று அமெரிக்க அரசு நினைக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. [து]

## பத்துப்பேர் சுட்டுக்கொலை

(காஷ்மீர்)

காஷ்மீரில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட சடந்த 48மணி தியாலங்களில் காஷ்மீர் பிரிவினைவாதக்குழுவின் பல்வேறு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 10பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

எதிர்வரும் புனித றம்ழான் பெருநாளை முன்னிட்டு இந்திய அரசு காஷ்மீரில் யுத்த நடவடிக்கை மேற்கொள்வதில்லையென அறிவித்திருந்தது தெரிந்ததே.

இதே வேளை 8பேர் கொண்ட தீவிரவாதக்குழு ரக்வாகனத்தில் சென்று கொண்டிருந்தவர்களை வழி மறித்து சுட்டதில் 5பேர் கொல்லப்பட்டதுடன் 6பேர் படுகாயமடைந்தனர். இதே போன்று வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 4பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

**பிலிப்பைன்ஸ் அதிபர் எஸ்ராடாவின்**

# விதியை செனட்சபை தீர்மானிக்காது வீதியே முடிவு செய்யும்

**எதிர்க்கட்சியினர் போர்முரசு**

[மணில]

பிலிப்பைன்ஸ்அதிபர்எஸ்ராடாவின் விதியை செனட் சபை தீர்மானிக்கமாட்டாது. வீதிதான் தீர்மானிக்கும் என அந்நாட்டு எதிர்க்கட்சியினர் ஆக்ரோஷமாக கூறிவருகின்றனர்.

அதிபர் ஆட்சிக் காலத்தில் நடந்து கொண்ட முறைகேடுகள் மற்றும் ஊழல் நடவடிக்கை தொடர்பாக அந்நாட்டு செனட் சபையில் பலமாக விவாதிக்கப்பட்டு வருவதுடன் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன் அவ்வழக்கை விசாரிக்க 23 யூரர் மார் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

இதற்கிடையில் சிங்கப்பூரில் தற்சமயம் நடைபெறும் ஆசியான் மாநாட்டில் அதிபர் யோசேப் எஸ்ராடா கலந்து கொண்டமை குறித்து சர்வதேச அரசியல் நோக்கர்கள் பலத்த ஆச்சரியம் வெளியிட்டுள்ளனர்.

இவர் இன்னமும் பதவி விலகவில்லையா என்றும் வினா எழுப்பியுள்ளனர்.

அதிபர் எஸ்ராடா உடன் பதவி விலகவேண்டும் என்று கோரும் முகமாக வீதிகளில பலத்த எதிர்ப்பியக்கம் நடத்த எதிர்க்கட்சியினர் உட்பட பல்வேறுதரப்பினரும் முயற்சித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது, [க-து]

# இந்தியா - பாக். இராணுவத்தினர் உடன்பாடு கண்டுள்ளனர்

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தான் எல்லைப் புறங்களில் அனுமதியின்றி பொதுமக்களைச் சுடுவதில்லை என்று இருதரப்பு இராணுவத்தினரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அண்மையில் எல்லைப்புறத்திலிருக்கும் இந்தியஇராணுவ அதிகாரிகளும் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்ட பேச்சுவார்த்தைகளின் முடிவில் எல்லைப்புற இருதரப்பு இராணுவத்தினரும் அனுமதியின்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்வதில்லை யென்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

வாகா எல்லைப்புறத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது இந்திய இராணுவஅதிகாரி தெரிவித்தார். (து)

## இரு பெரும் எதிரிகள் பாகிஸ்தானில் இணைவு

(இலண்டன்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரான நவாஷ்ஷெரிப் மற்றும்எதிர்க்கட்சித்தலைவரான பெனாஸிர் பூட்டோவும் இணைந்து கூட்டுக்கட்சி அமைக்க முன்வந்துள்ளனர்.

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியை எதிர்க்கும் முகமாகவே மேற்கண்ட முடிவிற்கு அவர்கள் வந்துள்ளனர்

பாகிஸ்தானின் முது பெரும் அரசியல் வாதியான நத்வுல்லக்கான் அவசரமாக இரு கட்சியினரையும் கூட்டி கூட்டுக் கட்சியாக செயற்பட வழி அமைத்துள்ளார்.

மீண்டும் பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வரவும் இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரவும் இரு கட்சிகளும் இணைந்து செயற்பட இருக்கின்றன.

நத்வுல்லக்கான் பாகிஸ்தானின் அரசியல் யாப்புக்கள் வரையப்பட்ட போதெல்லாம் முன்னின்று பெருமை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## காலமானார்

(சென்னை)

திராவிடக்கழக உறுப்பினரும் முன்னாள் சட்டசபை அங்கத்தவருமான டி.வி. நாராயணசாமி மாரடைப்பால் நேற்று முன்தினம் காலமானார்.

திரைப்பட நடிகரும்திரைப்படஇயக்குநரும்ஆகிய இவர் பல படங்களில்திராவிடககழகக்கருத்துக்களை வெளிப்படுத்தி நடித்தவர்.

சிறந்த சீர்திருத்தவாதியான இவரை நாடு என்றும் மறக்கமாட்டாது என்று அவரின் மரண இரங்கலுரையில் தெரிவிக்கப்பட்டது. (து)

**ஜப்பான் - வடகொரியா உறவுக்கு**

## கருத்துவேறுபாடுகள் தடை

**என்கிறார் ஜெசிரோ மோரி**

(டோக்கியோ)

ஜப்பானும் - வடகொரியாவும் உறவுகளைப் புதுப்பித்துக் கொள்வதில் இன்றும் கருத்து வேறுபாடுகள இருப்பதாக ஜப்பான் பிரதமர் ஜெசீரோ மோரி தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்; இரு நாடுகளுக்கிடையிலான கருத்து வேறுபாடுகள் விரைவில் நீங்கிவிடுமென்று தெரிவித்தார்.

வடகொரிய பிரதமர் கிங் யோஸ்கில்லும ஜப்பான் பிரதமரும் சந்தித்து உறவாடும் நாள் வரும் என்றும் ஆனால் அது எப்போது கைகூடும் என்பது சொல்ல முடியாதென்றும் மோரிதெரிவித்தார்.

இதே வேளை ஜப்பானுக்கும் வடகொரியாவுக்குமிடையில் நடைபெற்றபேச்சுவார்த்தைகள் மூன்றுமுறை முறிந்து போய் விட்டனவென்பதும் ஜப்பானை வடகொரியா மன்னிப்புக் கேட்கும்படி வற்புறுத்தியதும் கொலனி ஆட்சியில் நடந்தவற்றை நினைவூட்டியதும் குறிப்பிடத்தக்கது. (து)

**சிவசேனாக் கட்சியின்**

## தலைவர் வீட்டை தாக்க முயன்றோர் கைது

[புதுடில்லி]

சிவசேனா தலைவர் பால் தாக்கரேயின் வீட்டையும் நாக்பூரில் உள்ள ஆர். எஸ். எஸ். காரியாலயத்தையும் தகர்க்க முயற்சித்த தீவிரவாதிகளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குண்டு வைத்துத் தகர்க்கச் சதி செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மேற்படி நான்கு தீவிரவாதிகளையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்

லஸ்கரே கோய்யா என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த இவர்கள் ஒரு வீட்டில் இருந்த பொழுதே மகாராஷ்டிரா பொலிஸார் திடீரென்று சுற்றிவளைத்துக் கைது செய்தனர்.

இவர்களை கைது செய்தபோது வெடிக்க வைக்கும் பொருட்கள் உட்பட ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் சிவசேனா தலைவர் பால்தாக்கரேயின் வீட்டையும் கட்சிக் காரியாலயத்தையும் தகர்க்கும் தகவல்கள் இருந்தது கட்டுபிடிக்கப்பட்டுள்ளது. [து]

**தபாலகம் இயங்குகிறது**

விடத்தல்பளை உபஅஞ்சல் அலுவலகம் தற்போது கரவெட்டி அரசடிப்பகுதியில் ரலன்ற் தனியார் கல்வி நிலையத்துக்கு அருகாமையில் கொடிகாமம் வீதியிலுள்ள தனியார் வீடு ஒன்றில் இயங்கி வருவதாக உபஅதிபர் ச.குலநாதன் தெரிவித்துள்ளார். (ச-141)

# வேலை தேடி லிபியா சென்றோர் உடல்கருகி பரிதாப மரணம்

(திரிப்போலி)

சூடானிலிருந்து வேலை வாய்ப்புக்காக பாலைவனப் பகுதியூடாக லிபியா நோக்கி சென்ற 27 பேர் வழி தவறி சென்றதால் பாலைவனத்தில் உணவு, தண்ணீர்கிடைக்காமல் வாடி வதங்கி உயிரிழந்துள்ளனர்.

வடசூடானிலுள்ள டொங்கலா நகரிலிருந்து லிபியா நோக்கி செல்லும் போதுவழி தவறியதால் லிபியாவை சென்றடைய முடியாமல் பாலைவனத்தில் பிரயாணம் செய்ய வேண்டி நேரிட்டுள்ளதாகவும் பாலை வனத்தில் கடும் வெப்பத்தின் தாக்குதலால் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்களென லிபியாவிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இதேசமயம் கடந்த வருடமும் இது போன்ற ஒரு சம்பவத்தில் சூடானியளர்கள் 3 பேர் உயிரிழந்தமை பிடத்தக்கது.றி (வி)

தூடி புறங்காத்துஓம்பிக் குற்றங் கடிதல்
வடு என்று வேந்தன் தொழில்
- குறள் -

# வலம்புரி

## இலங்கையில் டைனோசர்

இலங்கை இனப்பிரச்சினை குறித்து வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலர் பல்வேறான கருத்துக்களை காலத்திற்குக்காலம் தெரிவித்துள்ளனர். ஆனால் கடந்த 22ம் திகதி இலங்கைக்கு வந்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் இனப்பிரச்சினை குறித்து வெளியிட்ட கருத்துக்கள் நிதர்சனமாகயதார்த்தத்தைப் புலப்படுத்துவதாகஅமைந்துள்ளது.

இதுவரை வெளிநாட்டுப்பிரதிநிதிகள் எவராலும் முன்வைக்கப்படாத உண்மையான கருத்துக்களை அவர் துணிந்து வெளியிட்டுள்ளமை பிரிட்டிஷ்வெளிவிவகார அமைச்சரின் ஆளுமையையும், இலங்கையின் நிலைப்பாடுகள் பற்றி அக்கு வேறு ஆணிவேறாக அறிந்து வைத்துள்ளார் என்பதையும் வெளிக்காட்டுகிறது.

அது மட்டுமன்றி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தமக்கு நெருங்கிய தொடர்புண்டு எனவும் அவர் தெட்டத் தெளிவாக - ஆணித்தரமாகக் கூறியுள்ளார். அவர் கூறிய உண்மை சிங்களப் பேரினவாதிகளுக்கு கசப்பாக இருந்தாலும், ஓர் இனத்தின் உரிமைக்காகப் போராடும் அமைப்புடன் தொடர்பு வைத்திருப்பதில் எந்தத் தவறுமில்லை, என்பதையும், தமிழீழ விடுதலைப் புலிகளை வெளிவிவகார அமைச்சரான தானும், பிரிட்டிஷ் அரசாங்கமும் அங்கீகரித்துள்ளோம் என்ற கருத்தையும் சாரமாக வைத்தே அவர் அப்படிக் கூறியுள்ளார். அதே

# சூழ்நிலைக்கேற்ப மாற்றமுறும் தடுப்பு முறைகள்

# யாழில் அதிகரிக்கும் மிதிவெடிச் சம்பவங்கள்

**இடம்பெயர்ந்த மக்களுக்கான மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு உடுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் அப்பகுதிக் கிராம உத்தியோகத்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. இக் கருத்தரங்கில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் (யுனிசெப்) சேர்ந்த அதிகாரிகள் கருத்துரை வழங்கியதோடு இது சம்பந்தமான விளக்கப் படங்கள் குறிப்புகள் அடங்கிய கையேடுகளையும் மக்களுக்கு விநியோகித்தனர்.**

யாழ்ப்பாணத்தில் மிதிவெடிச் சம்பவங்கள் தினமும் அதிகரித்து வருகின்றன இதனால் அப்பாவிப் பொதுமக்களின் உயிரிழப்புக்களும் அங்கஇழப்புக்களும் பெருகி வருகின்றன. இதற்கு இன்றைய நாளிதழ்கள் தக்க சான்று பகர்கின்றன. இதனால் மிதிவெடி, கண்ணிவெடி மற்றும் வெடிப்பொருட்கள் பற்றிய அறிவும் அது பற்றிய விழிப்புணர்வும் அவசியமாகின்றது என்று கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

### விழிப்புணர்வு

யுத்த சூழலில் மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப மக்கள் தம் வாழ்வை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. 1995ஆம் ஆண்டு இடம்பெயர்வின் போது யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டன. மீண்டும் மக்கள் மீளக்குடியேறிய போது பலர் இவைகளில் சிக்கி உயிரிழக்கவும் காயமடையவும் நேர்ந்தது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாகப் பெரும்பாலான வெடிப் பொருட்கள் சிம்பாவே நிபுணர்களால் மீட்கப்பட்டன. ஆயினும் பல வெடிப்புச் சம்பவங்கள் அண்மைக் காலங்களாக இடம்பெற்று வருகின்றன. தென்மராட்சிமண்ணில் இப்பிரச்சினை இருக்கவில்லை. ஆனால், மக்கள் மீண்டும் அங்கு மீளக்குடியேறும்போது பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி இருக்கும்.

### யாழ்ப்பாணம் 4 வதுஇடம்

உலகில் 64 நாடுகளில் மிதிவெடிப் பிரச்சினை பாரிய சிக்கலாக உருவெடுத்துள்ளது. இலங்கை (யாழ்ப்பாணம்) உலகில் மிதிவெடிப் பிரச்சினை உள்ள நாடுகளின் வரிசையில் 4வது இடத்தை வகிக்கின்றது. சர்வதேச ரீதியான ஆய்வுகளும் அறிக்கைகளும் இத்தகவல்களை ஊர்ஜிதம் செய்கின்றன,

### உயிருக்கு உலை

மிதிவெடிகள் தனிநபர்களை இலக்கு வைத்தே பெரும்பாலும் புதைக்கப்படுகின்றன. 'இவை தனிநபர் எதிர்ப்பு மிதிவெடிகள் எனப்படுகின்றன' இவற்றின் நோக்கம் எதுவாக இருந்தாலும் இறுதியில் பொதுமக்களின் உயிருக்கு உலை வைக்கும் ஏமனாக வந்துள்ளமை நோக்கப்படவேண்டிய ஒன்றே.

இவை தவிர ஆர். பி.ஜி. மோட்டார் எறிகணை, அருள் எறிகணை, கிரனேட் போன்ற வெடிப்பொருட்களும் மக்களுக்குத் தீங்குபயப்பனவாக உள்ளன.

வெடிப்பொருட்கள்காணப்படும் இடங்கள், அவற்றை இனங்காணும் வழிகள் காயமுற்றோருக்கான முதலுதவிச் சிகிச்சை என்பவற்றை இப்போது நோக்குவோம்,

மிதிவெடிகள் மறைந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் இடங்களாக பின்வருவன கருதப்படுகின்றன.

கைவிடப்பட்ட காவலாண்கள் மற்றும் பதுங்குகுழிகள், மண் அணைகள், கிணற்றடி, மலசல கூடங்களை அண்டிய இடங்கள், கடற்கரைகள், பழ மரங்களின் அடிகள், தென்னை, பனை மரங்களினடிகள், தேட்டக்காணிகள் இவை போன்ற இடங்களில் அவதானத்துடன்நடந்து கொள்வதன் மூலம் இப்பிரச்சனையிலிருந்து ஓரளவு விடுபட்டுக்கொள்ளலாம்.

இனி மிதிவெடிகளினுள் அகப்படாமல் விலகும் வழிமுறைகளைப் பார்ப்போம்.

பயன்படுத்திய பாதைகளைப் பின்பற்றல், பாதை ஓரங்களைத் தவிர்த்தல். முட்கம்பிச் சுருள்களை அணுகாதிருத்தல் விலங்குகள் இறந்து கிடக்கும் இடங்களுக்குச் செல்லாதிருத்தல்.

### எம். எஸ் எஸ் கீர்த்தி

சிலவேளைகளில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் பிரதேசத்தினுள் புக நேரிட்டால், அதிலிருந்து விடுபடுவதற்கு உட்சென்ற வழியை மீண்டும்பின்பற்றி அங்கிருந்து வெளியேறிக் கொள்ளலாம். அச்சமயம் அவ்விடத்தை அடையாளப்படுத்த வேண்டும் பின் அவ்விடயம் பற்றி தான் சார்ந்த சமூக அங்கத்தவர்களுக்கு விளக்கவேண்டும்.

### முதலுதவி

வெடிப்புச் சம்பவத்தில் காயப்பட்டவரின் குருதியைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். சுத்தமான துணியை காயப்பட்ட பகுதிமேல் சுற்றுதல் மற்றும் காயப்பட்டபகுதியை அவரின் இதயத் தளத்திற்கு மேல் தூக்கி நிறுத்துதல் போன்ற முறைகளின் மூலம் குருதியைக் கட்டுப்படுத்த முடியும். அவருக்கு உணவோ, குடிப்பதோ எதுவும் கொடுத்தல் கூடாது விரைவாக மருத்துவ மனையில் அனுமதிக்க வேண்டும்.

மேற் கூறப்பட்டவழிமுறைகளைப் பின்பற்றி மிதிவெடிப் பாதிப்பிலிருந்து ஓரளவு தப்பித்துக் கொள்ள முடியும். மேலும் மிதிவெடி, கண்ணிவெடி அபாயம் உள்ள பிரதேசங்கள் சதுரவடி முக்கோண வடிவ அபாய அவறிகுறிகள் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

### கவர்ச்சி

இவ்வாறான வெடிப்பொருட்கள் சிறுவர்களைக் கவரும் விளையாட்டுப் பொருள்வடிவத்தில் உற்பத்தி செய்யப்படுவதால் சிறுவர்களே இவற்றினால் பெரிதும் கவரப்படுகிறார்கள் அவற்றை நாடிச் சென்று ஆராயும் சிறார்கள் தடியால் அடித்தல், கல்லால் எறிதல், எத்

யும் நெருப்பினுள் எறிதல் போன்ற செயல்களை மேற்கொள்ளும்போது அவை வெடிப்பதனால் காயத்திற்கோஅல்லது உயிரிழப்புக்கே ஆளாகநேரிடுகிறது. பெரியவர்கள் விறகெடுக்கச் செல்லுதல், தேங்காய், பனங்காய் பொறுக்கச் செல்லுதலின் போது பெருமளவில் இவற்றில் சிக்க நேரிடுகிறது.

எனவே பொதுமக்கள் சிறு பிழைப்புகளை நாடிச்சென்று வாழ்வில் பெரும் செல்வங்களான அங்கங்களை இழந்து வாழ்நாள் முழுவதும் துன்புறும் நிலையைத் தவிர்த்து வாழ கண்ணுக்குத் தெரியாமலும் வெளிப்படையாகவும் மறைந்திருக்கும் வெடிப் பொருட்கள் பற்றிய அறிவு இன்றியமையாததாகின்றது.

# சாவகச்சேரி வைத்தியசாலையை மானிப்பாயில் இயக்க பெரும் முயற்சி

## சஞ்சிகை வெளியீடு

(சுண்டுக்குளி)

தென்மராட்சிக் கல்விவலய

பிரிட்டிஷ் அரசாங்கமும் அங்கீகரித்துள்ளோம் என்ற கருத்தையும் சாரமாக வைத்தே அவர் அப்படிக் கூறியுள்ளார். அதே வேளை நோர்வேயின் சமாதான முயற்சிகளை எதிர்க்கும் சிங்களப்பேரினவாதிகளை, உலகிலிருந்து அழிந்து போன டைனோசர் விலங்கிற்கும் ஒப்பிட்டுள்ளார். இலங்கையிலிருந்து நீண்ட காலமாக இனப்பிரச்சினை பற்றி ஆராய்ந்தவர்களால் கூட தெரிவிக்க முடியாத கருத்துக்களை பீற்றர்ஹெயின் கூறியுள்ளார்.

அத்துடன் சிங்களப் பேரினவாதிகளால் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் குறித்து அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதாவது இவ்வார்ப்பாட்டங்கள் தொடர்பாக இலங்கை அரசு கலங்கக்கூடாதெனவும், துணிவுடன் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதுமே அவரது கருத்தாகும்.

# சாவகச்சேரி வைத்தியசாலையை மானிப்பாயில் இயக்க பெரும் முயற்சி

[தென்மராட்சி]

சாவகச்சேரியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களைத் தொடர்ந்து கடந்த ஆறுமாதகாலமாக இயங்காத நிலையில் இருக்கும் சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலையை மானிப்பாயிலுள்ள கிறீன் வைத்தியசாலைக்கட்டடத்தில் இயக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்திய சாலையைப் புதிதாகச் செயல்படுத்துவதற்கு அடிப்படை வசதிகள் மற்றும் தளபாடங்கள் தேவைப்படுவதாகவும் அறியப்படுகின்றது.

இதே வேளை, சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்திய சாலையில் கடமை புரிந்த வைத்தியசாலை ஊழியர்கள் மாவட்டத்திலுள்ள வேறு வைத்தியசாலைகளில் தற்காலிகமாகக் கடமையாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அத்தகையவர் அத்தகைய வைத்தியசாலைகளில் சேவையாற்றி வருகின்றனர்.

மேலும் இந்த வைத்தியசாலை ஊழியர்கள் மானிப்பாயில் ஆரம்பிக்கப்படவுள்ள வைத்தியசாலைக்குக் கடமைக்குச் சமுகமளிக்கும்படி கேட்கும் போது வேறு நடைமுறைப் பிரச்சினைகளும் உருவாகக் கூடும் எனவும் தெரியவருகின்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பல ஆயிரக்கணக்கான நோயாளர்களுக்கு சேவையாற்றிய இவ்வைத்தியசாலை மானிப்பாயில் ஆரம்பிக்கப்பட்டாலும் கூட, தென்மராட்சி மக்களுக்கான முழுமையான வைத்திய சேவையை வழங்கக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படவில்லை என சாவகச்சேரிப் பிரமுகர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். (கு 77)

# வடமராட்சியில் கசிப்பு பொதுமக்கள் சிரமம்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதிகளில் அண்மைக்காலமாக கசிப்பு உற்பத்தி, விற்பனை நிலையங்கள் அதிகரித்துள்ளதாகவும் இதில் பெருமளவான இளைஞர்கள் ஈடுபடுவதாகவும் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

துன்னாலை, கொற்றாவத்தை ஆகிய பகுதிகளில் பெருமளவு கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாகவும் அவை இப்பிரதேசத்தின் பல பகுதிகளிலும் கிளைகளாக இயங்கும் வீடுகள், சாதாரண உணவுப் பொருள் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

மதுஅருந்திவிட்டுச் செல்வோர் வீதிகள் ஒழுங்கைகளில் தகாத வார்த்தைகளை பேசுவதோடு, சிலரிடம் கருத்து முரண்பாடுகளும் ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது.

இளைய தலைமுறையினர் மதுபோதையில் ஈடுபடுவது பெரும் கலாசார சீரழிவையும் ஏற்படுத்துமென சமூகவியலாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (க-[illegible])

# சஞ்சிகை வெளியீடு

(சுண்டுக்குளி)

தென்மராட்சிக் கல்விவலய சுகாதார உடற்கல்வி மன்றத்தினது உடற்கல்விப் பிரிவின் மெய்வண்ணம் சஞ்சிகையின் 3 வது இதழ் வெளிவந்துள்ளது.

இதில் 'உடற்கல்வியும், போஷாக்கும் என்பனவற்றுடன் விளையாட்டுத் துறையில் சாதனை படைத்தவீரர்களது வரலாறும், மற்றும் பலவித விளையாட்டுக்கள் முதலிய பல விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. (ச-110)

# மீன்பிடி அனுமதி

(கல்வயல்)

வியாபாரிமூலை. ஊறணி மற்றும் வல்வெட்டித்துறைப் பகுதிகளில் கரையோர மீன்பிடிக்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனால் மீன்பிடித்தொழிலில் கணிசமானோர் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளதனைத் தொடர்ந்து பாவனையாளர்களது தேவைகளை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்யக்கூடியதாக உள்ளதெனத் தெரியவருகிறது. (ச-111)

# மீனவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட உபகரணங்கள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாக்கடலில் மீன் பிடிக்கச் சென்ற கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் பகுதி மீனவர்களிடமிருந்து கடந்த மாதம் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட மீ பிடி உபகரணங்களை கடற்படையினர் நேற்று திருப்பி ஒப்படைத்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட உபகரணங்களைப் பெற்றுத் தரும்படி மேற்படி மீனவர்கள் ஈ.பி.டி.பி.யின் யாழ். அலுவலகத்தில் செய்த முறைப்பாடுகளையடுத்து ஈ.பி.டி.பி அமைப்பினர் 512 ஆம் படை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டனர்.

இதனை அடுத்து மீனவர்களின் கடல் அனுமதி அட்டைகள் 79, வள்ளங்கள் 15, மற்றும் மீன் பிடி வலைகள் என்பன பண்ணைப் பாலத்தில் வைத்து மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவற்றை வழங்கும் நிகழ்வில நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கே. மணிபல்லவராஜன், மற்றும் ஈ.பி.டி.பி.யின் பொதுசனத் தொடர்பாளர் ஆர் சிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.

குருநகர் கடற்பகுதியில் தொழில் செய்ய அனுமதித்த எல்லையைத் தாண்டி மீனவர்கள் சென்றதாலேயே மீன்பிடி உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்ததுடன் இனிமேல் இவ்வாறு கடல் எல்லையைத் தாண்டிச் செல்லக் கூடாதெனவும் அறிவுறுத்தியுள்ளனர். (ஸ்ரீ)

# விகாரையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டவர் இனங்காணப்பட்டார்

(சிலாபம்)

கதலாவெல ஸ்ரீமுனிந்தராம விகாரையில் வைத்து இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்ட இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மயானம் ஒன்றிலிருந்து பொலிஸாரினால் தோண்டி எடுக்கப்பட்டது.

வட்டபல ஆராட்சி சட்டுவ என்ற இடத்தைச் சேர்ந்த தயான் மனிச்சா என்ற இளைஞனே இவ்வாறு துப்பாக்கியால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டவராவார். இவரது உடலை அவரது தாயும், காதலியும் அடையாளம் காட்டியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக நான்கு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

படுகொலை செய்யப்பட்டவர் பொது ஜன ஐக்கிய முன்னணியின ஆதரவாளர் எனபதும் குறிப்பிடத்தக்கது. (5)

## யாழ்---

கல பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை மேற்படி மாணவனை விடுவிக்கக்கோரி சுமார் நூற்றுக்கும் அதிகமான தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் கொட்டும் மழையில் நனைந்தவறு நேற்றுக் காலை யாழ் நகர வீதி ழியே துவிச்சக்கர வண்டிகளில யாழ் செயலகத்தைச் சென்றடைந்து அரச அதிபரிடம மகஜர் ஒன்றைக்கையளித்தனர்.

இத்துடன் தொழில் நுட்ப கல்லூரி மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு ஏனைய சகல மாணவர்களும் கேட்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-12)

ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
சத்தியராஜ்
அருண்பாண்டியன்
ரோஜா, மணிவண்ணன்
நடிப்பில
புரட்சிக்காரன்
நேரடி CD
10.30, 2.30 (ப நேரம்)
[கி-688]

நாகம்ஸ்
(சுன்னாகம்)
அர்ஜுன், ரம்பா நடித்த
அடிமைச் சங்கிலி
(ரீல்ஸ்)
11.00; 2.30, (பு. நே)
(கி-1048)

# இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட ஆலயங்களின் புனரமைப்பு, கிராம அபிவிருத்தி நடவடிக்கை போன்றவிடயங்கள் தொடர்பாக ஆராயும் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையின் உபதலைவர் ப, ரவீந்திரன் தலைமையில் பொது நூலக மண்டபத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் சன சமூக நிலையப் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## துப்பாக்கி சூட்டில் இருவர்காயம்

(கொழும்பு)

கல்வியமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்தவின் பாதுகாப்பு அதிகாரி வைத்திருந்த துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் பொலிஸ் தரப்பில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தில்படுகாயமடைந்த பொலிஸார் இருவரும் ஸ்ரீ ஜெயவர்த்தன புரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-5)

## க.பொ.த

வலம்புரி தொலைபேசியில் தொடர்பு கொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பரீட்சை முடிவுகள் தொடர்பாக அவர் வலம்புரிக்கு மேலும் தகவல் தருகையில்

பாடசாலைகள் மூன்றாம் தவணை விடுமுறைக்காக மூடப்படுவதற்கு முன்னதாக இம் மாதம் 28ந் திகதிக்குள் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படும் என்று தெரிவித்தார்.

க பொ த. [உயர் தர]ப் பரீட்சை முடிவுகள் நேற்று வெள்ளிக்கிழமை வெளிவரும் என சில செய்திகள் வெளியாகியிருந்தது. குறிப்பிடத்தக்கது (ம)

## புலிகள்-

ஆகிய போராளிகளும்

கனகம்புளியடி கல்வயல் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடந்த 19ம் திகதி ஏற்பட்ட மோதலில்:

- கடலரசி
  மங்களராசா மணிமேகலை
  (வட்டக்கச்சி)
- புனிதவாணி
  அமிர்தநாதன் சுஜி
  (யாழ்ப்பாணம்)
- திருமகள்
  பாலசுப்பிரமணியம் காந்தரூபி
  (கனகராயன்குளம்)
- அருளினி
  அருமைநாயகம் மாலினி
  (யாழ்ப்பாணம்)
  ஆகிய போராளிகளும் ஓயாத அலைகள்-4, நடவடிக்கையில்
- கப்டன் சுதன்
  நாகராசா சிவகுமார்
  (வவுனியா)
- சுடர்விழி
  குமாரசுவாமி செந்தூரன்
  (யாழ்ப்பாணம்)
- அறிவு
  சேதுபதி ரமணன்
  (மல்லாவி)
- பாலா
  உதயகுமார் உதயரஞ்சினி
  (யாழ்ப்பாணம்)

ஆகியோர் வீரச்சாவடைந்ததாக புலிகள் அறிவித்துள்ளனர். (ம)

## இலங்கை அரசு.

நிலையை உருவாக்குவதில் உள்ள சிறிய நகர்வும் கடினமான செயலாகவே கருத முடியும்.

### பேச்சுவார்த்தை மேடைக்கு கொண்டுவர முயற்சி

செய்தியாளர் இராஜமோகனுக்கு பேட்டி அளித்த நோர்வேயின் விஷேட தூதுவர் இலங்கையின் இன நெருக்கடியில் விஷேடமான சிக்கல் காணப்படுவதை ஒத்துக் கொண்ட அதே வேளை விடுதலைப் புலிகளையும் அரசையும் பேச்சுவார்த்தை மேடைக்குக் கொண்டுவருவதற்கு நாம் தற்போது மேற்கொண்டிருக்கும் முயற்சியைத்தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருப்பதாகக்கூறினார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறைப்பதற்காக புலிகளுடனும், அரசுடனும் நடத்திய பேச்சுக்களின் எந்தவொரு விவரங்களையும் வெளியிடுவதில் எச்சரிக்கையாக இருந்தேன்.

பிரபாகரனுடனும் இலங்கையரசுடனும் நடத்திய பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சங்கள் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வத்சிங்கிடமும் எடுத்துக் கூறியிருந்தேன் என்றும் நோர்வேத் தூதுவர் கூறினார்.

### ரணில் இந்தியா பயணம்

இதேவேளை ஐக்கிய தேகியக் கட்சித்தலைவரும் ரணில் விக்கிரம சிங்காவை எரிக்சோல்ஹைய்ம் இந்தியாவில் தங்கியிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் ஒருவார கால விஜயத்தை மேற்கொண்டு நேற்று இந்தியா பயணமாகியுள்ளார்.

இந்தியா சென்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்கா சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக இந்தியத்தலைவர்களுடனும், நோர்வேத் தூதுவரிடமும் பேசுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு இலங்கைவரவிருக்கும் நோர்வேயின் தூதுவர் எரிக்சோல் ஹைம் மீண்டும் ஒருமுறை வன்னிசென்று பிரபாகரனுடன் பேச்சு நடத்துவார் என்றும் தெரியவருகிறது. (வ)

# யாழ் மாநகர சபையினரால் தற்காலிக கடைகள் யாவும் அகற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரில் மரக்கறிசந்தை அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிகக்கடைகள் யாவும் யாழ் மாநகரசபையினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையொன்றின்போது அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்நகரின் மத்தியில் அமைந்துள்ள மரக்கறிச் சந்தைக்குப்போகும் பாதைகளில் அமைக்கப்பட்டிருந்த இக் கடைகள் யாவும், சனநடமாட்டத்திற்கு பெரும் தடையாக இருந்துள்ளதை அடுத்தே இக்கடைகள்யாவும் அப்புறப் படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

# மீனவர்கள் சடலம் ஒப்படைக்கப்பட்டது

திருமலை நிலாவெளி கோபாலபுரம் பகுதியில் மீன் பிடிக்கச்சென்ற போது கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நான்கு மீனவர்களின் சடலங்களும் அவர்களது உறவினர்களிடம் பொலிஸாரினால் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

சுட்டுக்கொல்லப்பட்ட நான்கு மீனவர்களில் மூவர் ஒரேகுடும்ப உறவுகளைக் கொண்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களது சடலங்கள் உறவினர்களால் கோபாலபுரம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (வ)

# படைத்தரப்பைச் சேர்ந்த பதினைந்துபேர் கைது

(கொழும்பு)

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் தமிழ் இளைஞர்களின் படுகொலை தொடர்பாக பதினைந்து இராணுவ, பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் சீ.ஐ.டி பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கொழும்பு மஜிஸ்றேட் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 15வது கைதி சுகயீனம் காரணமாக கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதால் அடுத்தமாதம் 7 ஆம் திகதிக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிந்துனுவெவ கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்து தண்டனை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பொலிஸ்மா அதிபருக்கும் படை அதிகாரிகளுக்கும் உத்தரவுட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# திருமலை சம்பவத்திற்கு ரெலோ கண்டனம்

(திருமலை)

கடந்த புதன்கிழமை திருகோணமலை நிலாவெளி, கோபாலபுரத்தில் இடம் பெற்ற கடற்படையினரின் துப்பாக்கிச்சூட்டின் போது சுட்டுக் கொல்லப்பட்ட நான்கு மீனவர்களின் கொலைச் சம்பவத்தைக் கண்டித்து ரெலோ அமைப்பின் திருமலை மாவட்ட அமைப்பாளர் ரகு கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் 'அப்பாவிப் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. இத்தாக்குதல்கள் தமிழ் மக்கள் மீதான வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதாக அமைகிறது. சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறும் இவ்வேளையில் இச்சம்பவம் நடைபெற்றிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் பேச்சுவார்த்தையைக் குழப்பும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதாக அமையும் என்றும்தெரிவிக்கப்பட்டுடுள்ளது. (வ)

## மாவீரர்.

காலை வேளையில் விஷேட ஒலிபரப்பு ஒன்றினை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இந்த ஒலிபரப்பு வழமையான நேரத்தைவிட காலை வேளையில் அரை மணித்தியாலங்கள் மேலதிகமாக ஒலிபரப்பப்படவுள்ளது.

தமிழீழப் போராட்டத்தில் இன்னுயிர் நீர்த்த மாவீரர்களின் புனித நாட்களில் இடம்பெறும் நிகழ்வுகளில் மக்கள் கலந்து கொள்வதற்கான முன் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகிறது.

இன்று முதல் மூன்று தினங்கள் அனுஷ்டிக்கப்படும் எழுச்சி தினத்தை அடுத்து 27ம் திகதி தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ததும், அனைத்துலகத் தலைவர்களின் கவனத்தையும் ஈர்க்கும் மாவீரர் தின உரையை பிற்பகல் 5.40 மணிக்கு ஆற்றவுள்ளார்.

இதேவேளை வன்னிப்பெரு நிலப்பரப்பில் மாவீரர் குடும்பங்கள் கௌரவிக்கப்படும் நிகழ்ச்சிகளும் இடம் பெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது. (ம)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ் மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரியால் நடத்தப்படும் கூட்டுறவுப்பணியாளர் தாதரப் பத்திர சாதாரண பயிற்சி நெறி ($5\frac{1}{2}$ மாதங்கள்) மற்றும் உயர்தரப் பயிற்சி நெறி (9 மாதங்கள்) ஆகியவற்றுக்கானவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் இல. 14, மணிக்கூட்டு வீதியிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்கு ரூபா. 10 செலுத்தி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து எதிர் வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அதிபர் தெரிவித்துள்ளார். (ச-111)

## இலங்கை.

தூதுவர் எரிக்ஷோல் ஹைய்மின் முயற்சிக்கும் பிரிட்டிஷ் அமைச்சரான எனது முயற்சிக்கும் எதிர்ப்புத் தெரிவித்து சில அரசியல் டைனோசர்கள் கொடும்பாவி எரித்தும் அவமதித்துப் பேசியும் யுத்தத்தை மேலும் முன்னெடுக்க விரும்புகின்றன.

இவ்வாறான டைனோசர்கள் இருக்கும் வரை நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது சற்றுக் கடினமெனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-செ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.